விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 21 வியாழக்கிழமை (07.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 323

### நாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும்
## ஒப்பந்தங்களை ஏற்க மாட்டோம் - பந்துல குணவர்தன

(கொழும்பு)

எம்.சி.சி ஒப்பந்தம் மட்டுமல்ல நாட்டிற்கு பாதகங்களை ஏற்படுத்தும் வகையில் முன்வைக்கப்படும் எந்த ஒப்பந்தத்தையும் நாங்கள் அங்கீகரிக்க மாட்டோம் என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எம்.சி.சி ஒப்பந்தத்திலும் பல பாதகமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனால் இந்த ஒப்பந்தம் தொடர்பில் பாராளு 04

### பாராளுமன்ற உறுப்பினர்
## திசாநாயக்கவின் பாதுகாவலர் துப்பாக்கி பிரயோகம்
### இருவர் படுகாயம்

(கொழும்பு)

நாவலபிட்டி பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்கவுடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வன்முறையாக மாறியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பிரசார மேடைப் பகுதிக்கு திசாநாயக்கவை நுழைய விடாமல் சில தரப்பினர் தடுத்த நிலையில் அங்கு முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. 23

### பாராளுமன்றில்
## ஜனாதிபதி இன்று விசேட உரை

(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று கூடும் வேளையில் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பங்குகொள்ளும் இறுதி சபை அமர்வு என்பதனால் இன்றைய தினம் விசேட உரையொன்றை ஜனாதிபதி 23

# வடக்கு மக்களின் நிலங்களை இராணுவத்திடம் வழங்கத் தயாரில்லை

## தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிராகரிக்க முடியாது - அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் தமிழ் மக்களினதும் நியாயமான கோரிக்கைகளை நிராகரிக்க முடியாது எனவும் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகளை பெற்றுக்கொள்ளவே தமிழர் தரப்பு முயற்சிக்கின்றது என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். அத்தோடு வடக்கு கிழக்கிலுள்ள மக்களின் நிலங்களை இராணுவத்திடம் வழங்குவதற்கு தாம் தயாரில்லை யென்றும் அவர் குறிப்பிட்டார். (23ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதித் தேர்தல்
## 2, 983 முறைப்பாடு இதுவரை பதிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 2,983 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் செவ். 23

## தபால் மூலமாக இன்று மீண்டும் வாக்களிக்கலாம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தபால் மூல வாக்களிப்பில் கலந்துகொள்ள முடியாமல் போன சகல அரச ஊழியர்களுக்கும் இன்று மீண்டும் இறுதி சந்தர்ப்பம் வழ்ங்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 23

## காற்று மாசால் இலங்கையும் பாதிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

காற்று மாசினால் இலங்கையும் பாதிக்கப்பட்டிருப்பதாக தேசிய கட்டிட மற்றும் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த திணைக்களத்தின் சிரேஷ்ட விஞ்ஞானி இது தொடர்பாக தெரிவிக்கையில், கொழும்பின் 23

## அச்சம் என்பது எனக்கு துளியளவேனும் இல்லை
### ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச



(கொழும்பு)

தாம் எதற்கும் அஞ்சுபவர் அல்ல என புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். 23

## வவுனியாவில் டிப்பர் மோதியதில் 9 வயது சிறுமி உயிரிழப்பு

(வவுனியா)

கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனம் 9 வயது சிறுமி மீது மோதியதில் சிறுமி தலைசிதறி சம்பவ இடத்திலேயே அவரது தாயார் முன்னிலையில் உயிரிழந்தார்.

இக் கோர சம்பவம் நேற்று பிற்பகல் வவுனியா இலுப்பையடி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஹொரவப்பத்தான பகுதியில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் வேக்கட்டுப்பாட்டையிழந்து அதே திசையில் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த தாய் மற்றும் மகள் மீது மோதியுள்ளது.

இதில் திருநாவற்குளத்தை சேர்ந்த 9 வயதுடைய 23

## ரெலோவும் சஜித்துக்கு ஆதரவு

(வவுனியா)

ஆறு மணித்தியாலயங்களிற்கு மேலாக நீண்ட விவாதங் 23

### ராஜபக்ஷ தரப்பினரே நாட்டை சீரழித்தனர்
## இனவாதம் மட்டுமே அவர்களிடம் காணப்படுகின்றது - ரணில் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

ராஜபக்ஷ தரப்பினரிடம் இனவாதம் மட்டுமே காணப்படுவதாகவும் இவர்களே நாட்டை சீரழித்ததாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார். ஏறாவூரில் முன்னாள் முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2015ஆம் ஆண்டும் அன்னத்திற்கு வாக்களித்து இன, மத பேதத்தை ஒழித்தோம். ஆனாலும் ராஜபக்ஷக்கள் தலையெடுத்து இன 23

### புதிய அரசியலமைப்பு வரைபை விட
## சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனம் ஆபத்தாக உள்ளது - மகிந்த

(கொழும்பு)

பிரதமரினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச புதிய அரசியலமைப்பு வரைபை விடவும் ஆபத்தானதாகவே ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரி 23

### பலமடையும் சஜித் பிரேமதாஸ
## கோத்தாவின் பக்கமிருந்து முக்கியஸ்தர்கள் தாவல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கான நாட்கள் அண்மித்துள்ள நிலையில் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுடன் இணைவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ஐக்கிய தேசிய முன்னணியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. 04

# அரசின் செயற்பாடு காரணமாக மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த



அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'மக்கள் அனைவரும் செயற்பாடற்ற இந்த அரசாங்கத்தால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள்.

இன்று இலங்கை முழுவதும் எரிவாயுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையைக்கூட இந்த அரசாங்கத்தால் தீர்க்க முடியாதுள்ளது.

ஆனால். வாக்குறுதிகளை மட்டும் அள்ளி வீசுகிறார்கள். இதனை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே, 16ஆம் திகதி தாமரை மொட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்' எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 2005 – 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில்

# தாக்குலுக்குள்ளான ஊடகவியலாளர்களுக்கு

## இழப்பீடு வழங்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

2005 - 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் தாக்கப்பட்ட, துன்புறுத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பல்வேறு இடையூறுகளுக்கும் அழுத்தத்திற்கும் உள்ளான ஊடகவியலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசை கவனத்தில் கொண்டு இவ்வாறான 78 ஊடகவியலாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக அமைச்சரவை அந்தஸ்து அற்ற வெகுஜன ஊடகத்துறை அமைச்சரின் சிபாரிசிற்கு அமைவாக ஜனாதிபதி சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை இவ்வாறு அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-3)

# கெருடாவிலில் 3 லீற்றர் கசிப்பு மீட்பு

மீசாலை மேற்கு கெருடாவில் பகுதியில் 3 லீற்றர் 400 மில்லி லீற்றர் கசிப்பு வடித்துக் கொண்டிருந்த வேளை அதே பகுதியைச் சேர்ந்த ஒருவர் மதுவரி திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

நேற்று புதன்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஒருவர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

குற்றத்தை ஒப்புக் கொள்ளாத சந்தேக நபர் 5 லட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

விசாரணைக்காக எதிர்வரும் 19ஆம் திகதியிடப்பட்டுள்ளது. (ம-3,114)


# கண்ணீர்அஞ்சலி

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் ஆசிரியராக கடமையாற்றும்
திருமதி **கொன்சியா யாழினி துஷ்சங்கர்** அவர்களின் அன்பு மாமி

அமரர்

**வேலும்மயிலும் சரஸ்வதி**



அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(884)

ஆசிரியர் நட்புறவு மன்றம்
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை


## தமிழில் பேச முடியாதென

# ஊழியர்களுக்கு கட்டுப்பாடு விதித்த கொழும்பு பெப்பர்மின்ட் கபே

## மன்னிப்புக் கோரியது

தமிழில் பேச முடியாதென ஊழியர்களிற்கு கட்டுப்பாடு விதித்த கொழும்பு பெப்பர்மின்ட் கபே (Peppermint Café) தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்துள்ளது.

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவருக் மும்மொழியிலும் மன்னிபபுக் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

நிறுவனத்தின் அறிவிப்பு பலகை ஒன்றில் காணப்பட்ட தமிழ் மொழி தொடர்பான முறையற்ற வாசகங்கள், உலகம் முழுக்க தமிழ் மொழி பேசும்/எழுதும் இணையர்களின் கடும் கண்டனத்துக்கு உள்ளானது.

இவ்விவகாரம், இலங்கை அரச கரும மொழிகள் துறை அமைச்சர் மனோ கணேசனின் கவ்னத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து, அமைச்சரின் பணிப்புரையின் பேரில் அரச கரும மொழிகள் ஆணைக்குழுத் தலைவர், இந்நிறுவனத்திடம் இச்சம்பவம் தொடர்பில் கடிதம் மூலம் விளக்கம் கோரியிருந்தார்.

இக்கடிதத்துக்கு பதிலாக குறிப்பிட்ட நிறுவனததினர் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளிலான விளக்க கடிதங்களில், இந்த அறிவிப்பு பலகையில் காணப்பட்ட வாசகங்கள் தொடர்பில் மன்னிப்பு கோரி, நடந்த சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்துள்ளனர். (ம-3)


# மரண அறிவித்தல்

## திருமதி சிவசோதி அருணாசலம்

பிறப்பு: 13.08.1926
இறப்பு: 06.11.2019



சித்தங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவசோதி அருணாசலம் நேற்று (06.11.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - தில்லைமுத்து தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற அருணாசலத்தின் (முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை-பொன்னம்பலம், சிவானந்தன் - இரட்ணேஸ்வரி மற்றும் மகேஸ்வரி - பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நகுலேஸ்வரி, சிவகுமாரன், காலஞ்சென்ற ஜெயகுமாரன் மற்றும் அருட்சோதி, செல்வகுமாரன், மைதிலி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (மணியம் மாஸ்ரர்), சத்தியபாமா, நித்தியகல்யாணி, சுந்தரராஜன், ரஞ்சினிதேவி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் மணிவண்ணன் - Dr.நளினி, Dr.ரமணன் - மைதிலி, ஜனார்த்தனன்- Dr.நிரஞ்சனா, மீரானமத்ரே - Dr.மனோகரன், அபிரா-திவாகரன், சிவஜா, மயூரா - கிந்துசன், ஜெயராம், கோபிராஜ் - Dr.தர்சிகா, சர்மிளா- Dr.கிஷந்தா, நிருபராஜ், அனோஜன், தனூர்ஜன், தரணியன், ஆத்மிகா, மேருஜன், கஜாஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிலோசி, உமேஷ், ஊர்மி, சிந்துஜா, அனுஜா, ஹரிசன், லதுசன், விகாஷ், அக்ஷயா, யதுஷனன், ஆதீஷன், ருத்ரா, கவீன், கனுஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2019) வியாழக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்க்ள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி,
சித்தங்கேணி.

(இ)

தகவல்:-
குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்



## சீனிமுத்து பாலகிருஸ்ணன்

**(ஓய்வுநிலை ஆசிரியர் - யா/வட்டு.இந்துக் கல்லூரி)**

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீனிமுத்து பாலகிருஸ்ணன் (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/வட்டு இந்துக் கல்லூரி) அவர்கள் நேற்று (06.11.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிமுத்து - மகாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் அமரர்களான கந்தசாமி - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவதேவியின் (ராணி) அன்புக் கணவரும் சிவசங்கர், குருசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரஸ்வதியின் அ்ன்புத் தம்பியும் வைத்தியகலாநிதி ஆனந்தமூர்த்தி, கதிரமலைநாதன், கலாதேவி (சண்முகானந்தன்), சண்முகநாதன், ஸ்ரீநாதன் ஆகியோரின் மைத்துனரும் விக்னேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோர் மைத்துனர்களின் மனைவிமார் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.11.2019) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிஙயகள் திருவடிநிலை இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்ணாகம்
T.P - 077 511 6590

(892)

தகவல்:
குடும்பத்தினர்

## இலங்கையில் மீண்டும்
# பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்கப்போவதில்லை



## பொன்சேகா திட்டவட்டம்

(குருநாகல்)

**நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்கப் போவதில்லை என முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா திட்டவட்டமாகத் தெரிவித்தார்.**

குருநாகலில் நேற்றுத் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'நீதிமன்றங்கள், பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர் என அனைத்துத் தரப்பினருக்கும் கௌரவத்தை வழங்கும் வகையிலேயே நாம் செயற்படுவோம். புதிய அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சோ அல்லது சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சோ வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொறுப்புக்கு வந்தவுடன், நான் மக்களுக்காகவே முழுமையாகச் செயற்படுவேன். இந்த நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்கப்போவதில்லை.

இதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் நாம் மேற்கொள்வோம். அத்தோடு, போதைப்பொருள் வர்த்தகத்தையும் 2 மாதங்களில் முற்றாகக் கட்டுப்படுத்துவோம். 2 வருடங்களில் இலங்கையிலிருந்து போதைப்பொருள் வர்த்தகத்தை முற்றாக அழித்தொழிப்போம்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்திரிகா ஒரு செல்லாக்காசு

## எஸ்.பி.ஏளனம்



(ஹற்றன்)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஒரு செல்லாக்காசு என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க விமர்சித்தார்.

ஹற்றனில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அனைத்துச் சந்தர்ப்பத்திலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராகவே செயற்பட்டார்.

சந்திரிகா ஜனாதிபதியாகுவதற்கு முன்பாக அவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளவில்லை. அனைத்து உறுப்பினர்களும் அவருக்கு எதிராகவே அன்று செயற்பட்டனர்.




அவரை ஆதரித்து கட்சிக்குள் இணைத்துக்கொள்ள வேண்டும் என நானும் மங்கள சமரவீரவும் மாத்திரமே பாடுபட்டோம்.

இவ்வாறாக அனைவராலும் வெறுக்கப்பட்ட சந்திரிகா ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுவது ஒரு பெரிய விடயமாகக் க்ருத முடியாது.

அன்று முதல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைவிட மாற்றுக் கட்சியினருக்கு சந்திரிகா தனது ஆதரவை வழங்கி வந்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தை நாம் எதிர்க்கவில்லை-டளஸ் விளக்கம்



(கொழும்பு)

அமெரிக்காவின் மிலேனியம் சவால்கள் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மேற்கொள்வதற்கு பொதுஜன பெரமுன எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மேலும் இந்த விவகாரம் தொடர்பான இறுதி முடிவுக்கு வருவதற்கு முன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, அதனை மதிப்பீடு செய்யும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், நாட்டின் நிர்வாகத்தை தமது கட்சி பொறுப்புடன் ஏற்றுக்கொள்ளும் என்றும் கூறினார்.

மேலும் இந்த விவகாரம் தொடர்பாக பொறுப்புடன் ஸ்கையாளப்படும் என்றும் ஒப்பந்தத்தை விரிவாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அத்தோடு இந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் தொடர்பான விழிப்புணர்வு உருவாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர், அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். (இ-7)




யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

# சேவைநலன் பாராட்டுவிழா

**உபஅதிபர் திருமதி.லோகேஸ்வரி சுபேந்திரன்** Trd – Home Science (SLTS - 1)

**சேவைவிபரம்**
அ/ஹொரவப்பொத்தானை முஸ்லிம் வித்தியாலயம் 21.04.1982- 30.05.1984
அ/ இக்கிரிகொலாவ முஸ்லிம் வித்தியாலயம் 01.06.1984- 10.02.1985
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 11.02.1985 -31.12.1986
யா/மகாஜனக் கல்லூரி 14.08.1989-25.08.2019

மனைப்பொருளியல் ஆசிரியராக முப்பது வருடங்கள் எமது கல்லூரியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியை திருமதி.லோ.சுபேந்திரன் அவர்கள் கல்லூரிக்காய் பல பணிகளை இன்முகத்துடன் ஆற்றியவர். மனைப்பொருளியல் சார்ந்த போட்டிகளில் மாணவர்களைப் பங்குபெறச் செய்துபல வெற்றிகளை எம் மாணவர்கள் தம் வசமாக்குவதில் பெரும் பங்காற்றியவர். க.பொ.த (சா.த),(உ.த) பரீட்சையில் எமது மாணவர்களின் சித்திவீதம் அதிகரிக்க பல செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நடாத்தியவர்.

ஒழுக்காற்றுக் குழு பொறுப்பாசிரியராக இருந்து மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களை கண்டிப்புடன் நடைமுறைப்படுத்தினார். உப அதிபராக இருந்து நிர்வாகச் செயற்பாடுகளில் அதிபருக்குப் பக்கபலமாகச் செயற்பட்டார். இணைப்பாடவிதமான செயற்பாடுகளுக்கு புள்ளி வழங்கும் செயற்பாட்டில் பொறுப்பாக இருந்து மிகச் சிறப்பாக அதனை செயற்படுத்தியவர். பாடசாலை விழாக்களில் உபசரணைப் பொறுப்பினை இன்முகத்துடன் ஏற்று விருந்தினர்கள் மனம் கோணாதபடி உபசாரம் செய்வதில் மிகவும் திறமையானவர். 30 வருடசேவை காரணமாக பாடசாலைச் சமூகத்தினரை நன்கறிந்தவராக இருந்ததோடு அவர்களைப் பாடசாலைச் செயற்பாட்டில் முனைப்புடன் ஈடுபட வைத்தவர். எக்கடமையென்றாலும் மனம்கோணாது பொறுப்பெடுத்து அதனை செவ்வனே நிறைவேற்றும் பண்புகொண்ட ஆசிரியை அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்வது எமக்கு வெற்றிடத்தையே தருகிறது. ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியையின் ஓய்வுகாலம் சீரும் சிறப்புமாக விளங்க பாடசாலையில் குடிகொண்டிருக்கும் சிவகாமி சமேத ஆனந்தநடராஜப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

C-8144

# வர்ணனையாளராக செயற்படுவாரா டோனி?



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு பிறகு எந்த போட்டியிலும் பங்கேற்காமல் ஒதுங்கி இருக்கும் டோனி ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் அழைப்பை ஏற்று வர்ணனையாளராக செயற்படுவாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இந்தியா-வங்காளதேசம் அணிகள் இடையிலான 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பகல்-இரவு ஆட்டமாக கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் வருகிற 22-ந் தேதி தொடங்குகிறது. இந்தியாவில் நடைபெறும் முதல் பகல்-இரவு டெஸ்ட் போட்டி இதுவாகும். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த டெஸ்ட் போட்டியை நேரடியாக ஒளிபரப்பு செய்யும் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் நிறுவனம், இந்திய டெஸ்ட் அணியின் கப்டன்களாக இருந்த அனைவரையும் போட்டியின் வர்ணனையாளர் அறைக்கு அழைத்து வர முடிவு செய்துள்ளது. இதற்காக இந்திய கிரிக்கெட் வாரிய தலைவர் கங்குலிக்கு அனுமதி கேட்டு ஸ்டார் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் ஈ-மெயில் அனுப்பி இருக்கிறது. முன்னாள் டெஸ்ட் கப்டன்களின் போட்டி அனுபவம் குறித்து கேட்டு ஒளிபரப்ப முடிவு செய்துள்ளது.

அத்துடன் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு பிறகு எந்த போட்டியிலும் பங்கேற்காமல் ஒதுங்கி இருக்கும் டோனியையும் கௌரவ வர்ணனையாளராக கலந்து கொள்ளுமாறு அந்த நிறுவனம் அழைப்பு விடுத்து இருக்கிறது. இதனால் டோனி வர்ணனையாளர் குழுவில் இணைவாரா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

# சச்சின் சொல்லும் புது ஐடியா



ஒருநாள் கிரிக்கெட் போட்டியை இரண்டு இன்னிங்ஸாக நடத்துவதற்குப் பதிலாக நான்கு இன்னிங்ஸாக நடத்த வேண்டும் என ஜாம்பவான் கிரிக்கெட் வீரர் சச்சின் டென்டுல்கர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டி வகைகளில் டெஸ்ட் கிரிக்கெட் மட்டுமே நான்கு இன்னிங்ஸ்களாக நடத்தப்படுகிறது. இந்நிலையில் ஒருநாள் போட்டியையும் 25 ஓவர்களாக பிரித்து நான்கு இன்னிங்ஸ்களாக விளையாட வேண்டும் என சச்சின் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் "50 ஓவர் கிரிக்கெட் போட்டியை 25 ஓவர்களாக பிரித்து நான்கு இன்னிங்ஸாக நடத்தப்பட வேண்டும். ஒவ்வொரு இன்னிங்ஸிற்கும் இடையில் 15 நிமிடம் இடைவெளி கொடுக்க வேண்டும்.

ஏராளமான கண்டுபிடிப்புகளை கொண்டு வந்துள்ளோம். இதை கொண்டு வந்தால் மிகப்பெரியதாக இருக்கும். 50 ஓவர் போட்டியில் அணி 'ஏ' மற்றும் அணி 'பி' விளையாடுகிறது என்றால், அணி 'ஏ' நாணயச்சுழற்சியில் வென்றால், முதலில் 25 ஓவர்கள் துடுப்பாட்டம் செய்ய வேண்டும்.

அதன்பிறகு அணி 'பி' 25 ஓவர்கள் துடுப்பாட்டம் செய்ய வேண்டும். அதன்பின் அணி 'ஏ' 25 ஓவர்களில் என்ன நிலையில் இருந்ததோ, அதில் இருந்து ஆட்டத்தை தொடர வேண்டும். அதன்பின் அணி 'பி' துடுப்பெடுத்தாடி வெல்ல வேண்டும்.

ஒருவேளை 25 ஓவர்களுக்குள் அணி 'ஏ' சகல விக்கெட்டுக்களையும் இழந்துவிட்டால், அணி 'பி' 50 ஓவர்கள் தொடர்ச்சியாக விளையாடி ஓட்ட இலக்கை எட்ட விளையாடலாம். தற்போது ஏராளமான புதிய ஆலோசனைகள் உள்ளன. இதை 50 ஓவர் போட்டியில் நடைமுறைப்படுத்தலாம்" என்றார்.

# ஐ.பி.எல் ஏலத்தில் அணிகள் பயன்படுத்தும் ஏலத்தின் தொகைகள் வெளியிடப்பட்டன

அடுத்தாண்டு நடைபெறும் ஐபிஎல் தொடருக்கான ஏலம் வரும் டிசம்பர் மாதம் நடைபெறும் நிலையில் ஒவ்வொரு அணியும் ஏலத்தில் எவ்வளவு தொகையை பயன்படுத்த முடியும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

ஐபிஎல் போட்டிகளுக்கான ஏலம் இந்த முறை எதிர்வரும் டிசம்பர் 19 ஆம் திகதி கொல்கத்தாவில் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வீரர்களின் ஏலத்திற்காக அணிகள் இந்த முறை 85 கோடி ரூபாய் வரை செலவிடலாம் என ஐபிஎல் நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

இருப்பினும், அணியில் தக்க வைத்துக் கொண்டுள்ள வீரர்களின் ஊதியத் தொகையை தவிர்த்து உள்ள கையிருப்புத் தொகையிலேயே புதிய வீரர்களை ஏலம் எடுக்க இயலும்.

அந்த வகையில் டெல்லி அணி அதிகபட்சமாக 8.2 கோடி ரூபாயை இருப்பில் கொண்டுள்ளது. அதற்கு அடுத்தபடியாக, ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 7.15 கோடி ரூபாயை கையிருப்பில் வைத்துள்ளது.

அதனைத்தொடர்ந்து, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 6.5 கோடியை ஏலத்தில் பயன்படுத்தவுள்ளது. சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 5.30 கோடியை இருப்பாக பெற்றுள்ளது.

பஞ்சாப் அணி 3.7 கோடியையும், மும்பை அணி 3.55 கோடியையும், சென்னை அணி 3.2 கோடியையும் கையிருப்பாக கொண்டுள்ளன. குறைந்தபட்சமாக, பெங்களூர் அணி 1.8 கோடி ரூபாயை மட்டுமே கையில் வைத்துள்ளது.

தற்போதைய அணிகளில் இடம்பெறாத பல முன்னணி வீரர்கள் ஏலத்தில் பெரும் தொகைக்கு வாங்கப்படலாம் என நம்பப்படுகிறது.

இங்கிலாந்து அணித் தலைவர் இயான் மார்கன், வங்கதேச அணியின் நட்சத்திர வீரர் முஷ்ஃபிகுர் ரஹிம், அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் உள்ளிட்டோரை ஏலத்தில் எடுகக அணிகள் போட்டி போடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தியா-பங்களாதேஸ் அணிகள் இன்று மோதும் 2வது ரி-20 போட்டி நடப்பதில் சிக்கல்



மகா புயல் காரணமாக இந்தியா-வங்கதேசம் மோதும் 2வது டி-20 கிரிக்கெட் போட்டி நடப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இன்று நவம்பர் 7ம் திகதி மாலை 7 மணிக்கு குஜராத் மாநி லம் ராஜகோட்டு மைதானத்தில் இந்தியா-வங்கதேச அணிகள் மோதும் இரண் டாவது டி-20 போட்டி நடைபெறவுள்ளது.

2வது டி-20 போட்டியில் இந்திய அணி வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இதுஒரு புறம் இருக்க மகா புயல் ராஜஸ்தானில் நவம்பர் 6ம் திகதி கரையை கடக்கும் என தெரிவிக்கப்பட்டது. இதனால், இன்று போட்டி நடக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

எனினும், வியாழக்கிழமை நவம்பர் 7ம் திகதி காற்றின் வேகம் குறையும், போட்டிக்கு நடப்பதில் எந்த சிக்கலும் இருக்காது என வானிலை மையம் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

# முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானை எளிதில் வென்றது மே.தீவுகள்

ஆப்கானிஸ்தான் - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி லக்னோவில் நடைபெற்றது. நேற்று பகல் - இரவு போட்டியாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வெஸ்ட் இண்டீஸ் அணி கேப்டன் பொல்லார்டு டாஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி ஆப்கானிஸ்தான் முதலில் பேட்டிங் செய்தது.

ரஹ்மத் ஷா (61), இக்ரம் அலிகில் (58), அஸ்கர் ஆஃப்கன் (35) சிறப்பான விளையாடினர். மற்ற வீரர்கள் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் ஆப்கானிஸ்தான் 194 ரன்னில் சுருண்டது.

பின்னர் 195 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் வெஸ்ட் இண்டீஸ் பேட்டிங் செய்தது. ஷாய் ஹோப், லிவிஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். லிவிஸ் 7 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஹெட்மையர் 3 ரன்னில் ஏமாற்றம் அளித்தார். வெஸ்ட் இண்டீஸ் அணி 7.4 ஓவரில் 25 ரன்கள் எடுப்பதற்குள் இரண்டு விக்கெட்டுக்களை இழந்தது.

3-வது விக்கெட்டுக்கு ஷாய் ஹோப் உடன் ராஸ்டன் சேஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

ராஸ்டன் சேஸ் 94 ரன்கள் எடுத்து சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார். ஹோப் ஆட்டமிழக்காமல் 8 ரன்கள் சேர்க்க வெஸ்ட் இண்டீஸ் 46.3 ஓவரில் 3 விகெட் இழப்பிற்கு 197 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. ஷாய் ஹோப் 77 ரன்கள் அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

# கோத்தாவின் பக்கமிருந்து....

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான உமாசந்திர பிரகாஸ் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து, ஐக்கிய தேசிய முன்னணியில் நேற்று இணைந்துள்ளார்.

அதேபோன்று தமிழ் தேசிய முற்போக்கு கட்சியின் செயலாளர் ஆறுமுகம் ஜோன்சன் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் வைத்து கட்சியின் தேர்தலுக்குப் பொறுப்பான திஸ்ஸ அத்தநாயக்கவினால் இவர்கள் நேற்று வரவேற்கப்பட்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷக்கு ஆதரவு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# ஒப்பந்தங்களை ஏற்க...

மன்ற உறுப்பினர்களுக்கு தெளிவு படுத்தி பாராளுமன்றத்தில் விவாதமொன்றை நடத்த வேண்டும்.

இந்த எம்.சி.சி ஒப்பந்தத்தில் இலங்கைக்கான பொருளாதார பாதை தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என அமைச்சர் சம்பிக்க தெரிவித்திருந்தார். ஆனால் இந்த பொருளாதார பாதை எம்.சி.சி யில் இல்லையென குறிப்பிடப்பட்டுள் ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் , நிதி அமைச்சர் மங்கள சமரவீரவும் இணைந்து 2018 ஆம் ஆண்டு கைச்சாத்திட்டுள்ள அமைச்சரவை பத்திரத்திலேயே இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

வியத்மக காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார். (ம-3)

அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி

# ஜனாதிபதி செயலகம் முன் சிவாஜிலிங்கம் போராட்டம்



(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம், ஜனாதிபதி செயலகம் முன்பாக நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டார்.

சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு மற்றும் ஏனையவர்களை நிபந்தனையின்றி விடுவித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே அவர் இந்தப் போராட்டத்தை நடத்தினர். (இ-7)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## ஒருவர் கைது; உற்பத்தி உபகரணங்களும் பறிமுதல்



(கரணவாய்)

கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டதில் கசிப்பு மற்றும் உற்பத்தி உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டதாக சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

மீசாலை மேற்கு, கெருடாவில் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் சோதிநாதனின் வழிநடத்தலுக்கு அமைய சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி இந்திக்க பிரியந்த தலைமையிலான குழுவினர் மேற்படி பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதன்போது 3.4 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டன. இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். (இ-5-60)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 6ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வாலிபத் தீபாவளிக் கொண்டாட்டமும் கடந்த தீபாவளிதினத்தன்று இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் மன்னார் மாவட்ட அரச அதிபர் மோகன்ராஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (படங்கள்:- இளவாலை செய்தியாளர்)




## உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

# உத்தராடம் நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

அதிர்ஷ்ட ஜோதிடம்

உத்தராடம் 1 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்குரிய இராசி தனுசு ஆகும். தனுசு இராசியின் அதிபதி குரு ஆவார். அதன் சின்னம் வில் ஆகும். உத்தராடம் நட்சத்திரத்தின் அதிபதி சூரியன் ஆவார். அதன் சின்னம் ஆண் கிளி ஆகும். எனவே இவர்கள் நேர்மையாகவும் நல்ல புத்திசாலியாகவும் கொஞ்சம் முன் கோபமுடையவராகவும் இருக்கக்கூடும். தர்ம சிந்தனை, இரக்ககுணம், நல்ல தெய்வ பக்தியுடையவர்கள். தாய்ப்பாசம், தந்தை பாசமுடையவர்கள். சகோதர பாசம், மனைவி பாசம் சுமாராக இருக்கும். கல்வியில் உயர்பட்டம் பெறும் அதிர்ஷ்டம் உண்டு. பெரும்பாலும் இவர்கள் பத்திரிகை, பதிப்பகம், நூலகம், தரகு, கமிஷன் சம்பந்தமான தொழில் செய்ய நேரிடும். குழந்தை பாசமுடையவர்கள். இவர்களது இல்வாழ்க்கை ஊடல், கூடல் நிறைந்ததாகவும் இருக்கும்.

உத்தராடம் 2,3,4 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுடைய இராசி மகரம் ஆகும். அதன் அதிபதி சனி ஆவார். அதன் சின்னம் கடல் ஆடு ஆகும். உத்தராடத்தின் அதிபதி சூரியன் ஆவார். அதன் சின்னம் ஆண் கீரி ஆகும். எனவே இவர்களிடம் சோம்பேறித்தனமும், மந்த புத்தியும் உண்டு. ஆனால் இவர்கள் கடுமையான உழைப்பாளிகளாக இருப்பர். கொஞ்சம் மூர்க்கக் குணமும், முன்கோபமும் உண்டு. இவர்களது மனம் எப்போதும் குழப்பிக்கொண்டேயிருக்கும். தாய்ப் பாசம், தந்தை பாசம் சுமாராக இருக்கும். புத்திரபாசம் நிறைந்தவர்கள். சுமாராக படிப்பார்கள். சிலர் கல்வியில் கெட்டிக் காரர்களாக இருக்கவும் இடமுண்டு. இவர்கள் நல்லவனுக்கு நல்லவன். கெட்டவனுக்குக் கெட்டவன் என்ற கொள்கையுடன் செயற்பட நேரிடும். இவர்களது இல்வாழ்க்கை கொஞ்சம் போராட்டமாக இருக்கும். அவசர புத்தியுடையவர்கள். சில சமயம் முட்டாள்தனமாக முடிவெடுத்து சிரமப்பட நேரிடும்.

அடிக்கடி இவர்கள் தலைவலி, சுரம், நெஞ்சு வலி முதலியவற்றால் அவதியுற நேரிடும். பொய் சொல்லுதல், முன்னுக்குப் பின் முரணாக பேசுதல், வாய்ப்பு கிடைக்கும் போது பிறர்க்குத் துரோகம் செய்தல் போன்ற தீய குணங்களும் ஒரு சிலரிடம் இருக்கக் கூடும்.

# ஓவியக் கண்காட்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த ஓவியர் சிற்ப வல்லுநர் பொன்னர் பசுபதியின் ஓவியக் கண்காட்சி சுன்னாகம் பொது நூலகத்தில் நேற்று ஆரம்பமானது.

இக் கண்காட்சி இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறும் என சுன்னாகம் பொது நூலகத்தினர் தெரிவித்தனர். (இ-5)

# வாகன இலக்கத்தகடுகளை பெற்றுக்கொள்ள முடியும்

(யாழ்ப்பாணம்)

தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 31 ஆம் திகதி யாழ்ப்பாணம் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும், யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் வை.பரந்தாமன் அறிவித்தார். (5)



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் "கலைஞர் சுவதம் - 2019" நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக, வரணி இயற்றாலை கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த, பண்ணிசைக் கலைஞர் விநாசித்தம்பி சிவானந்தம் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக தென்மராட்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களால் அண்மையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். (படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)

# தொல்பொருள் திணைக்களக் காணியில் தீபாவளிக்கடை ஏன் போடவில்லை

## உறுப்பினர் கேள்வி? முதல்வர் பதில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டையைச் சூழவுள்ள தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் ஏன் மாநகர சபை கடைகள் போடவில்லை என உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு போதிய இடம் கிடைக்காததால் போடவில்லை என யாழ்.மாநகர முதல்வர் பதிலளித்தார்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சூழவுள்ள தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு தீபாவளிக் கடைத் தொகுதி போடுவதற்கு தொல்பொருள் திணைக்களம் அனுமதி வழங்கியது.

குறித்த காணி யாழ்.மாநகர சபைக்குள் வருவதால் அதனை ஏன் மாநகர சபை தீபாவளிக் கடைத் தொகுதி போடுவதற்கு பயன்படுத்தவில்லை எனச் சபை உறுப்பினர் இரா.செல்வவடிவேல் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த முதல்வர்.எமக்குப் போதிய இடம் கிடைத்ததால் நாம் அதைக் கோரவில்லை எனவும் எதிர்காலத்தில் குறித்த இடத்தை தேவை ஏற்படின் கோருவோம் என முதல்வர் இ.ஆனல்ட் பதிலளித்தார். (இ-10)

## இராசி பலன்

**மீனம்:** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், அரசு வழியில் எதிர்பார்ப்புகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர். மனம் மாறுவீர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சந் | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ஆலியம், மகம் | | |
| | | | |
| சனி, கேது, குரு | சுக் | சூரி, புத | செவ் |

**07.11.2019**

ஐப்பசி 21, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

தசமி முற்பகல் 11.37 மணிவரை

சதயம் முற்பகல் 11.22 மணிவரை

சுபநேரம் 7.35-9.05 மணிவரை

இராகுகாலம் 1.35-3.05 மணிவரை

வளவன்

**கடகம்:** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், கல்யாணக்கனவுகள் நனவாகலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நன்மைகள் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடல் நலன் சீராகும், குடும்பத்தினிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு:** உடன்பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, முன்னேற்றகரமான நாள்.

**துலாம்:** தாய்வழி ஆதரவு பெருகும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பிள்ளைகளின் கல்வி நலனில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், உடல்நலன் சீராகி உற்சாகமடைவீர்கள், பகைவர்கள் விலகுவர், நிலையான வருமானத்திற்கு வழி பிறக்கும்.

# பரிசில் நாள்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய பரிசில் நாள் இன்று 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் வித்தியால மண்டபத்தில் அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் இடம்பெறும். இதில், பிரதம விருந்தினராக வட மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) ரி.ஜோன்குயின்ரஸ், சிறப்பு விருந்தினராக யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) திருமதி. தர்மிகா மோகனராஜ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# ஜேர்மனியில் மரணமடைந்த 3 இலங்கைத் தமிழர்களின் உறவினர்கள் தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

ஜேர்மனி நாட்டின் இலங்கைத் தூதரகத்திலிருந்து 03 இலங்கையர்கள் காலமாகிவிட்டதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது தொடர்பில் அவர்களின் சட்ட ரீதியான உறவினர்களின் தொடர்புகளைப் பெறமுடியாமல் இருப்பதால் இவர்கள் தொடர்பான தகவல்களை அறிந்தவர்கள் இருப்பின் தொடர்பு கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சு யாழ்ப்பாண பிராந்திய அலுவலக உதவிப் பணிப்பாளர் அறிவித்தார்.

பெயர்: இந்திரன் இராஜதுரை- பிறந்த திகதி: 10.09.1938 - பிறந்த இடம்: வட்டுக்கோட்டை - இறந்த திகதி 09.09.2019, பெயர்: சிவதேவராஜா கந்தையா - பிறந்த திகதி: 19.10.1949 - பிறந்த இடம்: 26, வட்டாரம் 4, ஐதாம்புலம், ஊர்காவற்றுறை - இறந்த திகதி: 12.10.2019 - தேசிய அடையஅட்டை இலக்கம்: 492931896V - கடவுச்சீட்டு இல: N5071793. பெயர்: மாரிமுத்து ஐயம்பிள்ளை ரவீந்திரன் - பிறந்த திகதி: 07.07.1971 - பிறந்த இடம்: கிளிநொச்சி - இறந்த திகதி: 21.10.2019.

## வேலைவாய்ப்புக்கள் - மருந்தக கற்கைநெறி (PHARMACY COURSE)

வட இலங்கையில் யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரிப் பட்டப்படிப்பு) மருந்தக கற்கைநெறி கற்பிப்பதில் முன்னோடியாக விளங்குகிறது.

மருந்தகங்களில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு கீழ்க்காணும் கற்கைநெறிகள் உதவியாக இருக்கும். இந்தக் கற்கைநெறிகள் கற்பதற்கு வயதெல்லை இல்லை. மாதாந்த பயிற்சிக் கட்டணம் ரூபா.**2000/=** ஆகும்.

1.இவ் ஆண்டிற்குரிய PHARMACIST (EXTERNAL) பரீட்சை 23.11.2019ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது. இப் பரீட்சைக்கான மீட்டற் பயிற்சி வகுப்புகள் தற்போது கிழமை நாட்களிலும், சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்று வருகிறது.

2020/2021 ஆம் ஆண்டிற்கான மருந்தியலாளர் பரீட்சைக்கான புதிய வகுப்புகள் 23.11.2019 ஆம் திகதி காலை ஆரம்பமாகவுள்ளது. இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதி G.C.E O/L ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி, G.C.E. A/L இல் இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தி இருக்க வேண்டும்.

2. "CERTIFICATE IN PHARMACY" ஆறு மாத கால கற்கைநெறி 23.11.2019ஆம் திகதி பிற்பகல் ஆரம்பமாக உள்ளது. இதற்கான தகுதி G.C.E. O/L இல் ஆங்கில பாடம் உட்பட ஆறு பாடங்களில் சாதாரண சித்தி இருக்க வேண்டும்.

3. "PHARMACY TECHNICIAN" NATIONAL CERTIFICATE NVQ- LEVEL 4 இற்குரிய கற்கைநெறி 24.11.2019ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பிக்கப் படவுள்ளது. இதற்கான நோக்குநிலை தெளிவுபடுத்தும் அறிமுக விழாவும், நேர்முகப் பரீட்சையும் 09.11.2019ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு, 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கற்கைநெறிக்குரிய தகுதியுள்ளவர்கள் மருந்தகத்தில் நான்கு வருடங்கள் அனுபவத்துடன் தொடர்ந்தும் பணிபுரிந்து கொண்டிருப்பதாகும். இதற்கான ஆதாரங்களை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக தொடர்புகளுக்கு : நேரு Sir - 077 316 4251 (885)

# வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்ல 1,100 இ.போ.ச. பேருந்துகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்வதற்கு இதுவரையில் 1,100 பேருந்துகள் கோரப்பட்டிருப்பதாக இலங்கைப் போக்குரவரத்துச் சபை தெரிவித்தது.

தேர்தல் ஆணைக் குழுவின் கோரிக்கைக்கு அமைவாக இந்தப் பேருந்துகள் சம்பந்தப்பட்ட பணிகளில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அந்த சபையின் பொது முகாமையாளர் பி.எச்.ஆர்.ரி.சந்திரசிறி தெரிவித்தார்.(இ-7)

## யா/கொக்குவில் இந்துக்கல்லூரி தரம் - 6 அனுமதி (2020)

எமது கல்லூரியின் தரம்-6 அனுமதிக்கான விண்ண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 08.11.2019 வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்களை கல்லூரியின் காரியாலயத்தில் பாடசாலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 27.11.2019 (புதன்கிழமை) அல்லது அதற்கு முன்னராக பாடசாலை நேரத்தில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.2.30 மணி வரைக்கும் நேரிலோ அல்லது பதிவுத் தபாலினூடாகவோ கல்லூரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ம.ஞானசம்பந்தன், அதிபர்,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி. (சி-8146)

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 41 ¾ செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L காட்வெயர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: 10132 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: திருமணப்பதிவு இடம் பெற்றது. ஆனால் திருமணம் இடம் பெறவில்லை. விவாகரத்து பெறப்பட்டது. விவாகரத்து பெற்றவர் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/10186 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L Hotel management (டுபாய்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி பெண் வெளிநாடு மட்டும் பெண் உள்நாடு ஆயின் வெளிநாடு செல்ல வேண்டும்<br>தொ.இ: B/10133 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: L.L.B Researrch Assistant<br>எதிர்பார்ப்பு: எஞ்ஜினியர் கணக்காளர் வைத்தியர் வங்கியாளர் சட்டத்தரணி<br>தொ.இ: G/10189 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 30¾ செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமைதொழில்: கணிய அளவீட்டாளர் (கட்டார்)<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/10134 | பிறப்பு: 1989 கிறிஸ்தவம் RC<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>தகைமை/தொழில்:(A/L)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும் விவாகரத்து பெற்றவர் 6 வயதில் ஒரு ஆண் பிள்ளை உண்டு<br>தொ.இ: G/10194 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 37 ½ சூரி.செவ்.4இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Bsc,MscSoftware Engineer (London) UK PR<br>எதிர்பார்ப்பு உயர்கல்வி உயர் தொழில்<br>தொ.இ: B/10135 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 36 செவ் 2இல்.<br>தகைமை/தொழில்: பல்கலைக்கழகத்தில் ஆட்ஸ் பிரிவில் கற்கிறார்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (லண்டன் அல்லது பிரான்ஸ்)<br>தொ.இ: G/10197 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பாராட்டி வாழ்த்துகிறோம்

மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், முல்லைத்தீவு 2019 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி சாதனை படைத்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.



**சித்தியடைந்த மாணவர்கள்:**

ஈ.சங்கவி - 176, பா.கேதாஜினி - 168, ர.டிஷாளன் - 163, த.ஆர்த்திக் -153

**இவர்களோடு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்:**

பா.கிந்துஜன் - 141, கு.ஜெக்ஷனா - 134, பா.ரகுவர்மன் - 132, யோ.நீருஜா - 124, வி.தனுஷிகா - 122, சு.பிரவின் - 121, அ.கதுர்விகா - 116, ஜெ.ஜெக்ஷன் - 113, ச.கமிற்றா - 108, தெ.தேனிசை - 101.

இவர்களோடு 70-100 இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

இம் மாணவர்களை நல்வழிப்படுத்தி மேல்நிலை அடையச் செய்த வகுப்பாசிரியர் **செல்வி.சி.லக்ஷனா மற்றும் திருமதி அ.மேரிகீத்தா** ஆசிரியர், அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம். (சி-8145)

# ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வெற்றிபெற்ற பின் போதைப்பொருளுக்கு எதிராக பாரிய போர்!

## புதிய ஆட்சி குறித்து ஹர்ஷ விளக்கம்



(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலில் எமது வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வெற்றியடைந்த பின்னர் நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்ற போதைப் பொருள், ஊழல் மற்றும் மத அடிப்படைவாதத்திற்கு எதிராக பாரிய போரொன்றை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டிருக்கின்றார் என்று அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள இலங்கை மன்றக்கல்லூரியில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் எமது வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வெற்றியடைந்த பின்னர் போதைப்பொருளுக்கு எதிராகவும் ஊழல் மற்றும் மத அடிப்படைவாதத்திற்கு எதிராகவும் பாரிய யுத்தமொன்றை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறார். எமது நாட்டில் போதைப் பொருள் பாவனையால் பல இளைஞர், யுவதிகளின் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றது. எனவே அதனை முற்றாக ஒழிப்பதற்கு நூறு சதவீதம் அர்ப்பணிப்புடன் செயற்படும் அதே வேளை, போதைப்பொருள் குற்றம் தொடர்பான விசேட நீதிமன்றம் ஒன்று ஸ்தாபிக்கப்படும். பொலிஸாருக்கும் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருக்கும் விசேட பயிற்சிகளை வழங்குவதுடன் சட்டங்கள் மேலும் கடுமையாக்கப்படும்.

போதைப்பொருள் பாவனையைப் பொறுத்தவரை அதற்கு அடிமையாகியிருப்போர் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்கள் ஆகிய இரு பிரிவினர் உள்ளனர். அவர்களில் போதைப் பொருளுக்கு அடிமையானோர் தொடர்பில் சட்டங்கள் கடுமையாக்கப்படாது.

எனினும் அவர்களை போதைப்பொருள் பழக்கத்திலிருந்து மீட்பதற்கான புனர்வாழ்வு நிலையங்கள் தற்போது உள்ளதைப் போன்று 4 மடங்கினால் அதிகரிக்கப்படும். ஆனால் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு வாழ்நாளில் மன்னிப்பு வழங்கப்படாத வகையில் தண்டனைகள் மிகவும் கடுமையாக்கப்படும்.

அதுமாத்திரமன்றி வெளிநாடுகளிலுள்ள போதைப்பொருள் தடுப்புப் பிரிவுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி, அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து எமது நாட்டிற்குள் போதைப் பொருட்கள் கொண்டுவரப்படுவதைக் கட்டுப்படுத்துவோம்.

அத்தோடு எமது புதிய அரசாங்கத்தில் புதிய மதுபானசாலைகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படாது.

மேலும் தனது அரசாங்கத்தில் ஊழல் செயற்பாடுகளில் ஈடுபட்ட எவரும் அமைச்சரவையில் அங்கம் வகிக்க மாட்டார்கள் என்று சஜித் பிரேமதாஸ உறுதியளித்திருக்கின்றார். அதேபோன்று அனைவருக்கும் பொதுவான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுவதுடன், அதனை மீறிச்செயற்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

இலஞ்ச குற்றச்செயல்களைப் பொறுத்தவரை இலஞ்சம் பெறுபவர் மாத்திரமே குற்றவாளியாகவும், தண்டனைக்குரியவராகவும் பார்க்கப்படுகின்றார். ஆனால் இலஞ்சம் கொடுப்பதும் குற்றமாகும். எனவே இலஞ்சம் வழங்குபவர் மற்றும் பெறுபவர் ஆகிய இரு தரப்பினரும் தண்டனைக்கு உட்படுத்தப்படக்கூடிய விதமாக சட்டத்தில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பண்பாட்டுப் பெருவிழா

(கரணவாய்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசாரப் பேரவை, கலாசார அதிகாரசபை அனுசரணையில், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம் நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா இன்று 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் மூத்த விநாயகர் திருமண மண்டபத்தில் கலாசார பேரவைத் தலைவரும் பிரதேச செயலாளருமான ஈ.தயாரூபன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அதிபர் திருமதி.சி.பாலராணி, கௌரவ விருந்தினராக மூத்த கலைஞர் எழுத்தாளர் ஐ.சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-60)

## மகா மண்டப தூபி திறப்பு விழா

(திருகோணமலை)

திருகோணமலை இலிங்க் நகர் அருள்மிகு ஸ்ரீ கோணேசலிங்கப் பிள்ளையார் ஆலய மகா மண்டபத் தூபி திறப்பு விழா நாளை மறுதினம் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறும்.(இ-5)





உங்கள் வலம்புரி Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk Viber : 076 636 3378
E-mail : valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
T.P : 021 221 7603 Fax : 021 222 7829

20ஆவது ஆண்டு நிறைவை நோக்கிப் பயணிக்கிறது...

உங்கள் ஆசியும் அரவணைப்பும் இலட்சக்கணக்கான வாசகர் சேவையுடன் 20.12.2019 இல் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. இருபது ஆண்டு காலப் பயணத்தில் நடுவுநிலையுடன் அதிக வாசகர்களைக் கொண்ட, விற்பனையில் முன்னணி என்ற பெருமைகொண்ட ஒரே நாளிதழாக வலம்புரி வியாபகம் பெற்றுள்ளது.

விற்பனையில் சாதனை படைத்திருக்கும் வலம்புரியின் விற்பனைக் கணக்கெடுப்பை வலம்புரி விற்பனை முகவர்களிடம் கேட்டறிந்து கணக்கெடுங்கள். அப்போது உண்மை புரியும்.

இருபது ஆண்டு நிறைவில் உங்கள் வலம்புரி விசேட சலுகைக் கட்டணத்தில்

- மரண அறிவித்தல்
- கண்ணீர் அஞ்சலி
- நினைவஞ்சலி

ஆகிய விளம்பரங்கள் வெளியிடத் தீர்மானித்துள்ளது. தமிழர் தாயகம் எங்கும் வியாபித்துள்ள வலம்புரி 20ஆவது ஆண்டு நிறைவில் இன்னும் புதுப் பொலிவுடன் உங்களைச் சந்திக்கும்.

# வினைத்திறனாகச் செயற்பட்டிருந்தால் இழப்புக்களைக் குறைத்திருக்கலாம்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் சாட்சியம்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் உரிய தகவல்கள் வழங்கப்பட்டிருந்தும், அப்போதைய கொழும்பு வடக்கின் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்ஜீவ பண்டார உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கவில்லை என பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஷெல்டன் பத்திநாயக்க நேற்று முன்தினம் சாட்சியமளித்தார்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் அமைந்துள்ள கரையோர பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு உரிய தகவல் உரிய முறையில் பரிமாற்றப்படாமை ஊடாக தான் இதனை உணர்வதாகவும், உரிய முறையில் செயற்பட்டிருந்தால் குறித்த தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் இழப்புக்களை குறைத்திருக்கலாம் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தினம் இடம்பெற்ற தொடர் தற்கொலை தாக்குதல்களை மையப்படுத்தி அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 3 ஆவது நாளாக நடைபெற்ற நிலையில் 2 ஆவது சாட்சியாளராக பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஷெல்டன் பத்திநாயக்க தொடர்ந்து சாட்சியமளித்தார்.

இதன்போதே அரசின் பிரதி சொலிசிற்றர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத்தின் நெறிப்படுத்தலில் அவரின் கேள்விகளுக்கு பதிலளித்து அவர் இந்த சாட்சியத்தை பதிவு செய்தார்.

ஆணைக் குழுவின் தலைவர் மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி ஜனக் டி சில்வாவின் தலைமையிலான மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி நிசங்க பந்துல கருணாரத்ன, ஓய்வுபெற்ற நீதிபதிகளான நிஹால் சுனில் ராஜபக்ஷ, அத்தபத்து லியனகே பந்துல குமார அத்தபத்து, ஓய்வு பெற்ற அமைச்சு செயலர் டபிள்யூ. எம்.எம்.அதிகாரி அகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணி முதல் அவர் இரண்டாவது நாளாக சாட்சியமளிக்க ஆரம்பித்தார்.

இதன்போது தற்கொலை தாக்குதல்கள் தொடர்பில் போதுமான தகவல்கள் உளவு அறிக்கையில் இருந்தன. அந்த தகவல்கள் உரிய முறையில் உரிய தரப்பினரிடையே பரிமாற்றப்படவில்லை. இது பாரிய குறைபாடாகும். 'பொலிஸார் உளவுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றிருந்த நிலையில் அமைத்த பாதுகாப்பு போதுமானதல்ல. குறிப்பாக கொழும்பு வடக்குக்கு அப்போது பொறுப்பாக பொலிஸ் அத்தியட்சகர் சஞ்ஜீவ பண்டார இருந்தார்.

அவர் குறித்த உளவுத் தகவல்களை கீழ்நிலை அதிகாரிகளுக்கு வழங்கும் போது உரிய போதுமான நடவடிக்கைகளைக் கையாண்டதாக தெரியவில்லை. விசேடமாக கரையோர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் தந்தனாரந்தவுக்கு உளவுத் தகவல்கள் சரியாக பரிமாற்றப்பட்டிருக்கவில்லை.

அவரின் பொறுப்பில் உள்ள பகுதியிலேயே தாக்குதலுக்கு உள்ளான கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம் உள்ளது.

உரிய முறையில் கொழும்பு வடக்கு பொலிஸ் அத்தியட்சகர் செயற்பட்டிருந்தால் இழப்புக்களை குறைத்திருக்கலாம் என்பது எனது நிலைப்பாடாகும். அதேநேரம் கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ்வரும் கொழும்பு வடக்கு மற்றும் தெற்கு பொலிஸ் வலயங்களில் உள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் வினைத் திறனும் போதுமானதாக இல்லை. குறிப்பாக ஏப்ரல் 11 ஆம் திகதி அனைத்து பொலிஸ் வலயங்களுக்கும் அனுப்பப்பட்ட சஹ்ரான் தொடர்பிலான உளவுத் தகவலில் குறிப்பிட்டு, தங்குமிடங்கள் வாடகை வீடுகளை சோதனை செய்ய ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும் அது உரிய முறையில் செய்யப்பட்டதா என்பதில் சிக்கல் உள்ளது.

பாதுகாப்புத் தரப்பினரிடையே தகவல்களை பரிமாற்றிக் கொள்ள முறையான கட்டமைப்பு இல்லாமை மிகப்பெரும் குறைபாடாகும். அத்துடன்இந்தத்தாக்குதல்இடம் பெறும்வரை இஸ்லாமிய கடும் போக்குவாதம் தொடர்பில் பொலிஸாருக்கு உரிய அறிவு இருக்கவில்லை என்பதே எனது நிலைப்பாடாகும் எனச் சாட்சியமளித்தார்.

அதன் பின்னர் விசாரணை முன்னெடுக்கப்பட்ட முறைமை தொடர்பில் அவர் இரகசிய சாட்சியத்தை மாலை 5.45 இன் பின்னர் ஆரம்பித்தார்.

ஆணைக்குழுவின் அடுத்த கட்ட சாட்சிப்பதிவு இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெறும். (இ-7)

## பரிசளிப்பு விழா

(கரணவாய்)

துன்னாலை வடக்கு மெ.மி. த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை திறந்த வெளி அரங்கத்தில் அதிபர் சி.லிங்கதாஸ் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக கிழக்கு பல்கலைக்கழக விலங்கியல் துறைத் தலைவர் கலாநிதி சந்திரவதனி தேவதாசன் கலந்து கொள்வார். (இ-5-60)

# என்னைக் கொலை செய்யப்போவதாக மகிந்த எச்சரித்தார் -சஜின்வாஸ் முறைப்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு தொடர்ந்தும் ஆதரவளித்தால்தன்னைக்கொலை செய்யப்போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார் என முன்னாள் அமைச்சர் சஜின்வாஸ் குணவர்த்தன பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

இதனை கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் உறுதி செய்தார்.

17 வருடங்களாக நான் மகிந்த ராஜபக்ஷ குடும்பத்திற்காக பணியாற்றினேன் என தெரிவித்த சஜின்வாஸ் குணவர்த்தன. ஆனால் அவர்கள் எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த பின்னர் என்னை வெளியேற்றினார்கள் எனக் குறிப்பிட்டார்.

சட்டவிரோத பணப்பரிமாற்றம், அரச சொத்துக்களை தவறாக பயன்படுத்தியமை குறித்த வழக்குகள் இன்னமும், நீதிமன்றத்தில் உள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த வழக்குகளை மகிந்த அரசாங்கமே தாக்கல் செய்தது.

சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபடவேண்டாம் என பொதுஜன பெரமுனவிலுள்ள எனது நண்பரான நாடாளுமன்ற உறுப்பினர் அடிக்கடி என்னை கேட்டுக் கொண்டார்.

எனது மனைவிக்கும் இதுபோன்ற தொலைபேசி அழைப்புக்கள் வந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து எனது குடும்பத்தின் பாதுகாப்பிற்காக நான் பொலிஸில் முறைப்பாடு செய்யத் தீர்மானித்தேன் எனவும் சஜின்வாஸ் தெரிவித்தார்.

ஒருவரின் மரணத்தை தீர்மானிக்கும் அதிகாரம் அரசியல்வாதிக்கு இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 90 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 130 |
| பச்சைமிளகாய் | 200 | 130 | 250 |
| தக்காளி | 140 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 80 |
| கோவா | 160 | 90 | 160 |
| கரட் | 200 | 200 | 300 |
| பூசணி | 100 | 80 | 120 |
| புடோல் | 140 | 70 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 200 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 160 | 120 |
| பாகற்காய் | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 100 |
| பயற்றங்காய் | 140 | 190 | 160 |
| லீக்ஸ் | 150 | 140 | 280 |
| பீற்றூட் | 120 | 60 | 140 |
| கறிமிளகாய் | 300 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 320 |
| போஞ்சி | 140 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 120 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 60 |
| தேசிக்காய் | 150 | 200 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 450 | 30-50 |
| இராசவள்ளி | — | 180 | — |
| வெங்காயப்பூ | — | — | — |
| முள்ளங்கி | 60 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 150 | 120 |


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் செல்வி

## சித்திரவடிவேல் நாகரட்ணேஸ்வரி



கடந்த 09.10.2019 (புதன்கிழமை) அன்று சிவபதமடைந்த அமரர் செல்வி **சித்திரவடிவேல் நாகரட்ணேஸ்வரி** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் **07.11.2019** (வியாழக்கிழமை) இன்று காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் அவரின் பெறாமகள் திருமதி **லலிதகுமாரி பாலச்சந்திரன்** அவர்களின் இல்லத்திலும் (இல.916,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்) 08.11.2019 (வெள்ளிக்கிழமை) இடம்பெறும்.

**அத்தருணம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.** (834)

இல.916, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர். தொ.பே.இல: 021 222 7995



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## திருமதி வேலுப்பிள்ளை தங்கமுத்து

பிறப்பு 15 • 03 • 1934



இறப்பு 09 • 10 • 2019

கடந்த 09.10.2019 அன்று இறைபதமடைந்த **வேலுப்பிள்ளை தங்கமுத்து** அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் **08.11:2019** நாளை வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.** (C-8147)

8 ஆம் வட்டாரம், சிவன் கோவிலடி, புதுக்குடியிருப்பு.

தகவல்: குடும்பத்தினர்.



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 567 1532

# தமிழரசுக்கட்சியின் தனித்த முடிவு கவலையளிக்கிறது-செல்வம் எம்.பி

(நெளுக்குளம்)

தமிழரசுக்கட்சி தனித்து எடுத்த முடிவை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் முடிவு கவலையளிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

தமிழரசுக்கட்சி சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக அறிவித்தமை தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், என்னை பொறுத்தமட்டிலே எனக் கொரு ஆதங்கம் இருக்கிறது என்பதனை கூற விரும்புகின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒற்றுமையாக பயணிக்க வேண்டும் என்பதனை எதிர்பார்க்கின்றேன். அந்தவகையிலே என்ன முடிவெடுகின்றதென்பதை பல்கலைக்கழக மாணவர்கள் அவர்களினுடைய திறமைகளின் அடிப்படையில் இந்த ஐந்து கட்சிகளையும் ஒன்றாக சேர்த்திருக்கின்றார்கள்.

அந்த ரீதியிலே இந்த ஐந்து கட்சிகளும் ஒன்றாக ஒரு கருத்தை வெளியிட்டால் மிகச்சிறப்பாக, மக்களுக்கொரு சந்தோசமாக, மிக எழுச்சியாக மக்கள் தங்களுடைய வாக்குகளை போடுகின்ற நிலைமை இருக்குமென்று நாங்கள் எதிர்பார்த்தோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற ஏனைய கட்சிகளோடு இணைந்து அறிவித்தலை செய்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். நாங்களும் கட்சியில் பல தீர்மானங்களை எடுத்திருகின்றோம். இந்த ஒற்றுமை கருதி நாங்கள் வெளியிலே பல கருத்துக்களை சொல்வதில்லை. ஒரு தீர்மானத்தை எடுத்துவிட்டால் அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் ஏனைய பங்காளி கட்சிகளோடு சேர்ந்து எங்களுடைய முடிவை அறிவிப்போம் என்று கூறியிருந்தால் அது உண்மையிலே சிறப்பாக இருக்கும். (9-299)

# கிளிநொச்சியில் திடீர் காய்ச்சல், வயிற்றோட்டம் பாதிக்கப்பட்டோர் தொகை சடுதியாக அதிகரிப்பு

(அக்கராயன்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் காரணமாக அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.**

தற்போது மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதன் காரணமாக வைரஸ் காய்ச்சல், வயிற்றோட்டம் உட்பட பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கு பலர் உட்பட்டிருப்பதன் காரணமாக பொது வைத்தியசாலையில் நோயாளர்கள் தொகை அதிகரித்துள்ளது.

இதில் அதிகளவு சிறுவர்களே பாதிக்கப்பட்டுள்ளார்கள் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை விட கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் ஆதார வைத்தியசாலை, வேரவில் பிரதேச வைத்தியசாலை, பூநகரி பிரதேச வைத்தியசாலை, அக்கராயன் பிரதேச வைத்தியசாலை, தருமபுரம் பிரதேச வைத்தியசாலைகளில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கே நோயாளர்கள் வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவின் மாங்குளம் ஆதார வைத்தியசாலை, மல்லாவி ஆதார வைத்தியசாலைகளில் இருந்தும் நோயாளர்கள் வருகின்றனர்.

இதன் காரணமாக வெளி நோயாளர் பிரிவுகளில் நீண்ட நேரம் நோயாளர்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

உள் நோயாளர் பிரிவுகளிலும் அதிகமான நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறுகின்றனர்.

வெளி நோயாளர் பிரிவில் நீண்ட நேரம் நோயாளர்கள் காத்திருக்காமல் சிகிச்சைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் நிர்வாகம் எடுக்க வேண்டும் என பொது அமைப்புகள் வலியுறுத்தி உள்ளன. காரணம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சிகிச்சைக்கு வரும் மக்கள் வீடுகளுக்குத் திரும்புவதில் நெருக்கடி நிலைமை காணப்படுவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் தற்போது மாவட்டத்தில் நுளம்பு பெருக்கம் அதிகரித்துள்ளதோடு, ஈக்களின் பெருக்கமும் அதிகரித்து காணப்படுகிறது.

எனவே சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக பேணுவதோடு, நன்கு சுட்டாறிய நீரை குடிப்பதற்கு பயன்படுத்துமாறும், சிறுவர்கள் மலசலகூடத்திற்கு சென்று வந்த பின்னர் கைகளை நன்றாக சவர்க்காரம் கொண்டு கழுவுமாறும் சுகாதாரத்துறையினரும் அறிவுறுத்தியுள்ளனர். (9-100-350)

# பரிசளிப்பு விழா

(பூநகரி)

கிளிநொச்சி பூநகரி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று 7 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கல்லூரி முதல்வர் வீ.அரசகேசரி தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கே. கமலராஜன், சிறப்பு விருந்தினராக முன்னாள் பூநகரி கொத்தணி அதிபர் கே.குலசேகரம், கௌரவ விருந்தினராக சுவிஸ் நாட்டைச்சேர்ந்த கல்லூரி பழைய மாணவன் பிரதீப்பும் கலந்து கொள்ளவுள்ளனர். (9-84)




# வவுனியாவில் தடைப்பட்ட மின்சாரத்தை போராடிப் பெற்ற இளைஞர்கள்

(நெளுக்குளம்)

வவுனியாவில் இரு நாட்களாக தடைப்பட்ட மின்சாரத்தினை இளைஞர்கள் ஒன்று திரண்டு 5 மணி நேரத்திற்கும் அதிகமான நேரம் போராடி மீண்டும் மின்சாரத்தைப் பெற்றுள்ளனர்.

வவுனியாவில் மின்சாரசபை ஊழியர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து ஊழியர்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தை முன்னெடுத்தனர். அத்துடன் பல இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

இரு நாட்கள் மின்சாரம் கிடைக்காமையினால் இளைஞர்கள் சிலர் வீதியில் இறங்கி போராடத் தயாரானார்கள்.

முழுமையாக ஏ9 வீதியின் போக்குவரத்தை தடைப்படுத்தும் வகையில் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தாண்டிக்குளம் சந்தியில் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந் நிலையில் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவின் பல பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தாண்டிக்குளம் சந்திக்கு படையெடுத்தனர். இதனால்போராட்டம் உச்சம் பெற்றிருந்தது. ஏ9 வீதியின் போக்குவரத்து முடங்கிய நிலையில் இரவு புகையிரத்தினை வழிமறிக்க இளைஞர்கள் ஒன்றுதிரண்டனர். தாண்டிக்குளம் சந்தியில் புகையிரத பாதையில் வெளிச்சத்தினை பாய்ச்சி புகையிரத சாரதிக்கு சமிக்ஞை காட்டியதை அடுத்து சாரதியினால் புகையிரதம் நிறுத்தப்பட்டதும் புகையிரத பாதையில் சீமெந்திலால்ான போக் ஒன்றினை குறுக்காக போட்டதுடன் புகையிரதத்திலும் ஏறி இருந்து கொண்டனர்.

சுமார் ஒரு மணி நேரமாக புகையிரதமும் பயணத்தினை தொடரமுடியாத வகையில் இளைஞர்கள் புகையிரத்தினை மறித்து வைத்திருந்தனர்.

இந் நிலையில் போராட்டம் 5 மணித்தியாலங்களையும் கடந்து சென்றுகொண்டிருந்தபோது பொலிஸார் மின்சார சபை ஊழியர்களை ஏற்றிச்சென்று ஒரு சில பகுதிகளில் தடைப்பட்டிருந்த மின்சாரத்தினை வழங்க ஏற்பாடுகளை மேற்கொண்டு மின்சாரத்தினை வழங்கியிருந்தனர். இந்நிலையில் இளைஞர்கள் தமது போராட்டத்தினை நேற்று முன்தினம் இரவு 1 மணியளவில்நிறைவுக்கொண்டு வந்ததையடுத்து ஏ9 வீதியிலான போக்குவரத்து மற்றும் புகையிரத போக்குவரத்தும் வழமைக்கு திரும்பியிருந்தது. (9-299)

# வன்னேரிக்குளத்திலிருந்து வெளியேறும் நீரை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள்



(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் நீரினை தடுக்கும் முயற்சிகளில் வன்னேரிக் குளம் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

வன்னேரிக்குளத்தின் முழுமையான நீர்மட்டம் 09 அடி 06 அங்குலமாகும். ஆனால் குளத்தின் நீர் மட்டம் 05 அடி 08 அங்குலமாக இருக்கும்போது குளத்தின் பின்பக்கமாக தெற்குப் பகுதியில் குளத்தின் நீர் வெளியேறுவதன் காரணமாக குளத்தின் நீர் மட்டம் முழுமை பெறாத நிலைமை காணப்படுகின்றது.

ஆண்டுதோறும் 1,500 இற்கு மேற்பட்ட மண்மூடைகள் அடுக்கப்பட்டு குளத்தின் நீர் வெளியேறாமல் தடுக்கும் முயற்சிகள் மேற் கொண்டாலும் அதிக வெள்ளம் மண் மூடைகளை மூடிப் பாய்வதனால் குளத்தின் நீர்மட்டம் முழுமை பெறாததன் காரணமாக சிறுபோக நெற் செய்கைக்கு நீரினைச் சேகரிக்க முடியாத நிலைமை காணப்பட்டது.

நீர்ப்பாசனத் திணைக்களம் குறித்த பகுதியில் நிரந்தரக் கட்டுமானத்தினை உருவாக்குவதற்கான வேலைகளை முன்னெடுக்காத நிலையில் ஆண்டுதோறும் கிராம விவசாயிகள் மண் மூடைகளை அடுக்கி வெளியேறும் நீரினை தடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த கையில் நேற்று முன்தினம் ஒவ்வொரு விவசாயியும் பத்து பைகளுடன் சென்று குறித்த பகுதியில் நீர் வெளியேறாமல் தடுக்கும் வேலைகளில் ஈடுபட்டனர். கிளிநொச்சி மாவட்டச் செயலகம் வன் னேரிக்குளத்தில் இருந்து நீர் வெளியேறாமல் குறித்த பகுதியில் நிரந்தரக் கட்டுமானத்தினை உருவாக்குவதற்கு வேலைகளை முன்னெடுக்க வேண்டும் என வன்னேரிக்குளம் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (9-350)

# பூநகரி ஆலயங்களில் இடம்பெறும் தொடர் திருட்டுச் சம்பவங்கள்

(பூநகரி)

பூநகரி வாடியடி நகருக்கு அருகாமையிலுள்ள இரு ஆலயங்களில் கடந்த தீபாவளி தினத்தன்று இரவு வேளை கூரை ஓட்டைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் ஆலய உண்டியலை உடைத்து பணத்தை அபகரித்துச் சென்றதோடு ஆலயத்தில் உள்ள பொருட்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

இதேபோன்ற திருட்டுச்சம்பவங்கள் பூநகரி கோபாலபிட்டி பிள்ளையார் ஆலயத்திலும் மட்டுவில்நாடு இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள முடவைரவர் ஆலயத்திலும் நடைபெற்றுள்ளதாக பூநகரிப் பொலிஸ் நிலையத்தில் ஆலயங்களின் நிர்வாகத்தினரால் புகார் செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில்சம்பவம் நடைபெற்ற ஆலயங்களுக்கு பொலிஸார் சென்று பார்வையிட்டு விசாரணையில் ஈடுபட்டதுடன் பாதுகாப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (9-84)

# மணல் ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் நாளை மறுதினம் 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க மணல் ஏலவிற்பனை இடம்பெறவுள்ளது.

ஏலவிற்பனைக்கான மணலினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (9)

# 9 மோட்டார்சைக்கிள்கள் பொலிஸாரால் பறிமுதல்

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸாரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது தலைக் கவசம் அணியாமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை, வாகன இலக்கத்தகடு இன்மை போன்ற குற்றச்சாட்டின் அடிப்ப டையில் 9 மோட்டார் சைக்கிள்களை தருமபுரம் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

அத்துடன் குறித்த மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (9-316)

# கோத்தபாய ஆட்சிக்கு வந்தாலும் நீண்டகாலம் ஜனாதிபதியாக இருக்கமாட்டார்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(மன்னார்)

**தப்பித் தவறியாவது கோத்தபாய ஆட்சிக்கு வந்தால், மகிந்த ராஜபக்ஷ அவரை நீண்ட காலத்துக்கு ஜனாதிபதியாக இருக்க விடமாட்டார். தனக்கு கிடைக்காத பதவி வேறு யாருக்கும் கிடைக்கக்கூடாது என்பதில் அவர் உறுதியானவர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**


ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து கடந்த திங்கட்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பேரினவாத சக்திகள் முஸ்லிம் அரசியல் தலைமைகள் சிலரை இராஜினாமா செய்யுமாறு ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆனால், நாங்கள் ஒட்டுமொத்தமாக பதவிகளைத் துறந்து சமூகத்தையும் முஸ்லிம் தலைமைகளையும் காப்பாற்றினோம்.

ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் ஆறுதலடையும் வகையில் எங்களது இராஜினாமா அமைந்தது. எதிர்வரும் தேர்தல்களிலும் ஒற்றுமையாக ஒரே கட்சியின் கீழ் போட்டியிட வேண்டுமென்ற அழுத்தங்களும் மக்கள் மத்தியில் உள்ளன. அதன் சாத்தியத் தன்மை தொடர்பில் எனக்கு நம்பிக்கையில்லை.

வில்பத்து விவகாரத்தின் பின்னணியில் இருக்கின்ற பேரி



னவாத கும்பலின் விசமக் கருத்துகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவும் அதன் உண்மைத் தன்மையைநாடறியச்செய்யவேண்டும் என்ற நோக்கிலும் நாங்கள் அதனைச் செய்தோம். ஆனால், அங்கும்சிலர்மாமூல்அரசியல்வாதிகளாகத்தான் செயற்பட்டார்கள்.

தவறியேனும் மாற்றுத்தரப்பு ஆட்சியைக் கைப்பற்றினால் கடந்தகாலத்தில் முஸ்லிம்கள் அனுபவித்த இன்னல்களைவிட இரட்டிப்பான விளைவுகளை சந்திக்க நேரிடும். அந்தக் கும்பலின் நோக்கமே, ஆட்சியைக் கைப்பற்றி நிரந்தரமாக தன்னகத்தே வைத்துக்கொள்வதாகும். அதற்காக என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையையும் செய்வார்கள்.

நாட்டுப்பற்று. பற்றி மேடைகளில் அள்ளிவீசி விளையாடுபவர்கள் உண்மையில் நாட்டுப்பற்று கொண்டவர்கள் அல்ல. தமிழர்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணத்தின் விமான நிலைய பெயர்ப் பலகையில் தமிழுக்கு முதலிடம் வழங்கப்பட்டதை விமல் வீரவன்ச விளாசித் திரிகிறார்.

வெறிந்தனம் பிடித்த இந்தக் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கு மென்று சிந்தித்துப் பாருங்கள்.

முஸ்லிம் சமூகம் முழுமையாக வெறுக்கின்ற வேட்பாளர் ஒருவரை வெற்றிபெறச் செய்வதற்கு பக்கவாத்தியமாக ஹிஸ்புல்லாவும் தேர்தலில் களமிறங்கியுள்ளார். அவரைக் காப்பாற்றுவதற்கு நாங்கள் ஒன்றுசேர்ந்து இராஜினாமா செய்தால், அவர் மீண்டும் அந்த இனவாதக் கும்பலின் வெற்றிக்காக தேர்தலில் போட்டியிடுகிறார்.

எமது சமூகம் மிகத்தெளிவாக சிந்தனையுடன் வாக்களிப்புகளில் ஈடுபட வேண்டும். முஸ்லிம் தலைமை எடுத்த முடிவின் மீது நம்பிக்கை வையுங்கள் என மேலும் தெரிவித்தார். (9)

# கல்வி அபிவிருத்திக்கான விழிப்புணர்வு செயலமர்வு



(பரந்தன்)

கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி அமைப்பினால் கல்வி அபிவிருத்திக்கான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி கனகாம்பிகை குளம் அ.த.க.பாடசாலையில் இடம்பெற்றது.

குறித்த செயலமர்வில் பாடசாலை கல்வி குழு, பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் மற்றும் அனைத்து கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பெற்றோர், பழைய மாணவர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட கல்வி முறை மீள்குடியேற்றத்தின் பின்பு பல சவால்களுக்கு முகம்கொடுத்து வருகின்றது. இதற்கு பல குடும்பங்கள் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

கிராமங்களில் நிலவும் நிச்சயமற்ற தன்மை, சூழல், நோய்கள் என்பவற்றால் மாணவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டு ஒழுங்கான கல்விகளை பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மேலும் மதுசாரம், புகைத்தல் மற்றும் போதைப் பொருட்கள் பயன்பாட்டால் ஏற்படும் குடும்ப வன்முறைகளால் குடும்ப மகிழ்ச்சி இல்லாத சூழலும் வறுமையும் போசாக்கின்மை காரணமாக பிள்ளைகள் உள, உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிள்ளைகளுக்கு ஏற்ற சத்துள்ள உணவுகள் எவை எனத் தெரிந்தும் சத்துள்ள உணவுகளான பழங்கள், பால், முட்டை என்பவற்றை வழங்காது பணத்தேவையின் காரணமாக விற்றமின் சத்துணவுகளை விட்டு தம்முடைய வசதிக்கேற்றவாறு ரோல் மற்றும் மிக்சர் போன்ற சாதாரண பண்டங்களை வழங்குவதனால் ஞாபக சக்தி இன்மை, குருதிச்சோகை என்பன காணப்படுகின்றன.

இதுவும் மாணவர்களின் கல்வி தடைப்படுவதற்கான காரணியாக அமைகின்றது. வீட்டுச் சூழல், பிள்ளைகளை கடுமையாக நடத்துதல், குற்றம் கூறல், அவசரப்படுதல் என்பனவும் பிள்ளைகளின் மனநிலையில் பாதிப்பை ஏற்படுத்துவதால் அவர்கள் கல்வியிலும் வெறுப்பை அடைகின்றனர். அத்துடன் திரைப்படங்கள், தொலைக்காட்சி தொடர்கள் பார்த்தல் என்பது, அரட்டை அடித்து வீண் பொழுது போக்குதல் என்பனவும் மாணவர்களின் கல்வி தடைப்படுவதற்கான காரணிகளாக அமைகின்றன.

மேலும் பிள்ளைகளின் கற்றலுக்கான பெற்றோரின் ஈடுபாடும் பங்களிப்பும் குறைவாகவே உள்ளது. பிள்ளைகளின் சுய கற்றலுக்கான வாய்ப்புகள் இல்லாத நிலைமை என பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டன. இது தவிர மாணவர்களின் ஒழுக்க விழுமியங்கள், தன்னம்பிக்கை, விடாமுயற்சி மற்றும் இலட்சியம் என்பன தொடர்பாக விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது. (9-312)




# புதிய ஜனநாயக முன்னணியின் மகளிர் ஒன்றுகூடல் வவுனியாவில்



(குருமன்காடு)

புதிய ஜனநாயக முன்னணியின் மகளிர் ஒன்றுகூடல் மாநாடு வவுனியா தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தில் பெண்கள் அமைப்பின் தலைவிகள், கிராம மட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பத் தலைவிகள் மற்றும் பல பெண்கள் கலந்துகொண்ட குறித்த மாநாட்டில் பெண்களுக்கான நலத்திட்டங்கள் தொடர்பாக பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இம்மாநாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பாரியார் ஜலனி பிரேமதாஸ, அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனாநாயக்க, வவுனியா நகரசபை உறுப்பினர் ஏ.ஆர்.எம் லரிப் அப்துல்பாரி, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (9-250)

## அக்கராயன் குளம் திறப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளம் காலபோக நெற்செய்கைக்காக நேற்று முன்தினம் திறந்து விடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் குளத்தின் கீழான கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் நீர் திறந்து விடும் நிகழ்வில் கலந்து கொண்டனர். நான்காயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப் பரப்பில் தற்போது அக்கராயன் குளத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-350)

# சஜித்தின் துணைவியார் உள்ளிட்ட குழுவினர் மன்.ஆயருடன் சந்திப்பு



(மன்னார்)

வடக்கிற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் துணைவியார் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் மன்னார் ஆயர் இல்லத்திற்கு சென்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை சந்தித்தனர்.

இச்சந்திப்பில் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனநாயக்கா ஆகியோர் கலந்து கொண்டனர். (9-285)

# முல்லைத்தீவிலுள்ள 65 பாடசாலைகளில் குடிநீரை பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 65 பாடசாலைகளில் குடிநீரினைப் பெற்றுக் கொள்வதில் மாணவர்களும் ஆசிரியர்களும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.


பாடசாலை நாட்களில் மாணவர்கள் குடிநீர் பிரச்சினையினை எதிர்கொள்கின்றனர். மழை காலத்தில் கிணறுகளின் நீர் மட்டம் உயர்ந்தாலும் அதனை உடனடியாக பயன்படுத்த முடியாத நிலையில் மாணவர்கள் உள்ளனர். காரணம் கல்சியப்படிவுகள் குடிநீரில் காணப்படுவதாகவும் இதன் காரணமாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீரினை பெற்றுக் கொள்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்குச் செல்லும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தமது பாடசாலைகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரினைப் பெற்றுக் கொள்வதற்கான வழியினை உருவாக்குமாறு பாடசாலைகளின் நிர்வாகங்களினால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றன. (9-350)

# பாரதம்

# சந்திரயான்-2 வெற்றி அறிவியல் ஆர்வத்தை தூண்டியுள்ளது

## மோடி பெருமிதம்



(டில்லி)

சந்திரயான் 2 வெற்றி, இளைஞர்களின் அறிவியல் ஆர்வத்தை தூண்டியுள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மேற்குவங்க தலைநகர் கொல்கத்தாவில் 5 ஆவது இந்திய சர்வதேச அறிவியல் திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் 'விஞ்ஞான் பாரதி' நடத்தும் இந்த அறிவியல் திருவிழாவை பிரதமர் நரேந்திர மோடி டில்லியிலிருந்து நேற்று முன்தினம் காணொலி காட்சி மூலம் தொடக்கி வைத்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்,

"அறிவியல் துறையில் இந்தியா பல்வேறு சாதனைகளை படைத்து வருகிறது. இதில் சந்திரயான் 2 வெற்றியும் ஒன்றாகும்.

இதன் காரணமாக இந்திய இளைஞர்களின் அறிவியல் ஆர்வம் தூண்டப்பட்டிருக்கிறது. அவர்கள் அறிவியல் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும். அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியை மனித குலத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும்.

நூடில்ஸ், பிட்சா தயாரிப்பது போல அறிவியல் ஆராய்ச்சியில் உடனடியாக பலனை எதிர்பார்க்க முடியாது. ஆராய்ச்சிக்கு பொறுமை மிகவும் அவசியம். ஒரு தலைமுறையின் கண்டுபிடிப்பு, அடுத்த தலைமுறைக்கு பயனுள்ளதாக அமையும்.

அறிவியல் ஆராய்ச்சிகளைப் பொறுத்தவரை தோல்வியே கிடையாது. வெற்றி கிடைக்கும் வரை முயற்சிகள் தொடரும். அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியின்றி எந்தவொரு நாடும் முன்னேற முடியாது.

அறிவியல் ஆராய்ச்சியில் இந்தியா முன்னோடியாகத் திகழ்கிறது. தலைசிறந்த விஞ்ஞானிகளை உலகுக்கு இந்தியா வழங்கியுள்ளது. நமது விஞ்ஞானிகளின் சாதனைகள் தொடரும்" எனவும் அவர் கூறினார். (2)

# போதைப்பொருள் கும்பலி... குழந்தைகள் உட்பட 9 பே...

(மெக்சிக்கோ சிற்றி)

**வடக்கு மெக்சிக்கோவில் போதைப் பொருள் கும்பலின் துப்பாக்கி ஏந்திய சந்தேக நபர்களால் நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று பெண்கள், ஆறு குழந்தைகள் என 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.**

உயிரிழந்தவர்கள் 10 ஆண்டுகளுக்கு முன்னரே குறித்த பகுதியில் குடியேறியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோதே குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் போதைப் பொருள் துப்பாக்கி ஏந்திய சந்தேக நபர்கள் தவறான அடையாளத்தின் விளைவாக இவர்கள் மீது தாக்குதல் நடத்தி...



யிரு... சசு... பதி... குடு...

# தாய்லாந்தில் துப்... 15 பேர் பரிதாபமா...



(பாங்கொக்)

தாய்லாந்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி உட்பட 15 பேர் உயிரிழந்தனர்.

தாய்லாந்தில் இஸ்லாமிய சமூகத்தினர் அதிக முள்... தென்பகுதியிலுள்ள சோதனை... சாவடியை இலக்கு வைத்தே நேற்று... புதன்கிழமை இந்த தாக்குத... நடத்தப்பட்டது.

எந்... வில்... முன... இரு...

# திருவள்ளுவர் சிலைக்கு சாணம் வீசி அவமதிப்பு; தமிழகம் தழுவிய போராட்டத்திற்கு அழைப்பு

## தொல் திருமாவளவன்

(சென்னை)

திருவள்ளுவரை முன்னிறுத்தி அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பவர்களைக் கண்டித்து தமிழகம் தழுவிய மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அறிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டம் வரும் 11 ஆம் திகதி நடைபெறும் என நேற்று புதன் கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

குறித்த அறிக்கையில், "திருவள்ளுவரை அவமதிக்கும் வகையில் தமிழக பா.ஜ.கவின் அதிகாரபூர்வமான டுவிட்டர் பக்கத்தில் அவருக்கு காவி உடை உடுத்தி, திருநீறு பூசி அவரை இந்துத் துறவியாக பதிவு செய்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து தஞ்சாவூர் அருகே பிள்ளையார்பட்டி என்னுமிடத்தில் திருவள்ளுவர் சிலையின் மீது சாணம் வீசி அவமதித்துள்ளனர். இந்த அநாகரிகப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம்.



திருவள்ளுவர் சாதி, மதம், மொழி, இனம் மற்றும் தேசம் போன்ற அனைத்து வரம்புகளையும் கடந்தவர். அதற்கு அவருடைய படைப்பான திருக்குறளே சாட்சியமாகும்.

உலகமெங்கும் வாழ்கின்ற ஒட்டுமொத்த மனித குலத்தையும் எக்காலமும் வழிநடத்தக் கூடிய ஒரு மகத்தான மனித நேயக் கோட்பாட்டை உலகுக்கு வழங்கிய உன்னத மகான் திருவள்ளுவர்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மானுட சமத்துவத்திற்காக உரத்துக் குரல் எழுப்பிய மாமனிதரான திருவள்ளுவரைக் காவி உடுத்தி அவமதித்த பா.ஜ.கவினர் மற்றும் சாணியடித்து இழிவு செய்த சமூக விரோதிகள் ஆகியோரை தமிழக அரசு உடனடியாக தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் சிறைப்படுத்த வேண்டும்.

திருவள்ளுவரை முன்னிறுத்தி அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கும் கும்பலைக் கண்டிக்கும் வகையிலும் சாதி, மத வெறுப்பு அரசியலிலிருந்து தமிழகத்தைக் காக்கும் நோக்கிலும் வரும் 11 ஆம் திகதி தமிழகம் தழுவிய அளவில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்த அறப்போராட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகளுடன் அனைத்து ஜனநாயக சக்திகளும் பங்கேற்க வேண்டுமென அழைப்பு விடுக்கிறோம்" என தொல்.திருமாவளவன் தெரிவித்தார். (2)

# கிரீஸ் நாட்டில் கு... 41 பேர் பாரவூர்தி...

(ஏதென்ஸ்)

பிரித்தானியாவில் கொள்கலன் பாரவூர்திக்குள் 39 சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட அதிர்ச்சி ஓய்வதற்குள் கிரீஸ் நாட்டில் குடியேற வந்த 41 பேர் குளிரூட்டப்பட்ட பாரவூர்தியிலிருந்து கடந்த திங்கட்கிழமை கண்டுபிடிக்கப்பட்டனர்.

உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள லிபியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளிலிருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகப் பயணிக்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கு கடல் கடந்து செல்லும் இந்த அகதிகள், ரப்பர் படகு போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்வதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



மத்திய தரைக்கடல் வழியாக துருக்கியைக் கடந்து அகதிகளை ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி பெரும் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி வருகின்றமை தொடர்கதையாக உள்ளது.

அத்துடன் ஐரோப்பிய நாடுகளில் குடியேறும் நோக்கத்தில் பலர் வீதி வழியாகவும் சட்டவிரோதமாகப் பயணம் செய்கின்றனர். பெரும்பாலும்...

இவ... ளுக்... கடந்... டிய... நுழை... வார... திற... கப்ப... தெ... நேற...

# 488 பயணிகளுடன் விமானம் அவசர அவசரமாக தரையிறக்கம்

(மொஸ்கோ)

போயிங் - 777 என்ற விமானம் ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் உள்ள ஷெரெமெட்டியோ சர்வதேச விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

விமானத்தின் இயந்திரத்தில் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவு காரணமாக இவ்வாறு அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளதாக ஷெரெமெட்டியோ விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




குறித்த விமானத்தில் 488 பேர் இருந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

# வெளிநாடு

## லின் தாக்குதலில் சிக்கி பேர் பரிதாபமாகப் பலி





யிருக்கலாம் என பாதுகாப்பு அமைச்சு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், "அற்புதமான குடும்பம் மற்றும் நண்பர்கள். ஒருவருக்கொருவர் சுட்டுக் கொண்டிருந்த இரண்டு போதைப்பொருள் விற்பனையாளர்களிடையே சிக்கிக் கொண்டனர்" என டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (2)


## ப்பாக்கிச் சூடு! மாக உயிரிழப்பு



இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப் பேற்கவில்லை. எனினும் தாக்குதலை முஸ்லிம் பிரிவினைவாதிகள் நடத்தி இருக்கலாம் என பொலிஸார் தரப்பில் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தத் துப்பாக்கிச் சூடு தொடர்பாக தாய்லாந்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (2)

## டியேற முயன்ற தியிலிருந்து மீட்பு



இவர்கள் கொள்கலன் பெட்டகங்களுக்குள் மறைத்து சில தரகர்களால் கடத்தப்படுகின்றனர்.

அந்த வகையில், வியட்நாம் நாட்டிலிருந்து பிரித்தானியாவிற்குள் நுழைய முயன்ற 39 பேர் கடந்த வாரம் ஒரு கொள்கலன் வாகனத்திற்குள் சடலங்களாக கண்டெடுக்கப்பட்டன.

இந்த நிலையில், கிரீஸ் நாட்டின் தெசலோனிக்கி நகரின் அருகே நேற்று வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஏக்னாட்டியா பெருந்தெரு வழியாக வந்த குளிர்பதனம் செய்யப்பட்ட பாரவூர்தியை க்ஸாந்தி மற்றும் கோமோட்டினி பகுதிகளுக்கு இடையில் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டனர்.

அப்போது கொள்கலன் பெட்டகத்திற்குள் மறைந்திருந்த 41 பேரை பொலிஸார் கைது செய்ததுடன், பலவீனமாக இருந்த சுமார் 10 பேருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

கைதான சாரதி ஜோர்ஜியா நாட்டைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ள நிலையில் அவரால் அழைத்து வரப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று கருதப்படுவதாக கிரீஸ் நாட்டு ஊடக்ங்கள் தெரிவித்துள்ளன. இந்த ஆட்கடத்தலில் தொடர்புடைய துருக்கி நாட்டவரைக் கைது செய்வதற்காக பொலிஸார் தேடி வருகின்றனர். (2)

## காலநிலை மாற்றத்தினால் பாரிய நெருக்கடிகள் ஏற்படும்

### 11,000 விஞ்ஞானிகள் கூட்டாக எச்சரிக்கை

(பாரிஸ்)

காலநிலை நெருக்கடி காரணமாக மக்கள் எதிர்காலத்தில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளக்கூடும் என 11,000 விஞ்ஞானிகள் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



பூமி காலநிலை தொடர்பில் அவசர நிலையை எதிர்கொள்கின்றது என நாங்கள் தெளிவாகவும் எந்தவித சந்தேகமும் இன்றியும் தெரிவிக்கின்றோம் என 11,000 விஞ்ஞானிகள் அறிக்கையொன்றில் எச்சரித்துள்ளனர்.

பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு நாங்கள் வாழும் முறையை மாற்ற வேண்டும் என எச்சரித்துடன் இதற்கு எங்கள் சர்வதேச சமூகம் செயற்படும் விதத்தில் பாரிய மாற்றங்கள் அவசியம். அதாவது இயற்கையை கையாளும் விதத்தில் மாற்றங்கள் அவசியம் என அவர்கள் தெரிவித்தனர்.

இழப்பதற்கு நேரமில்லை என தெரிவித்துள்ள விஞ்ஞானிகள் காலநிலை மாற்ற நெருக்கடிகள் ஆரம்பித்துவிட்டன, இந்த நெருக்கடி விஞ்ஞானிகள் எதிர்பார்த்ததை விட வேகமாக இடம் பெறுகின்றன எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது நாங்கள் எதிர்பார்த்ததைவிட கடுமையானதாக உள்ளது. சூழல் இயல் அமைப்புகளை இது அச்சுறுத்துகின்றது, மனிதகுலத்தின் தலைவிதிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது எனவும் விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (2)

## பிரிட்டன் பொதுத் தேர்தல் பிரசாரம் நேற்று ஆரம்பம்

(லண்டன்)

பிரித்தானிய பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் பொதுத் தேர்தலுக்கான பிரசாரம் நேற்று புதன்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகியது.

பிரதமர் போரிஸ் ஜான்சன் டிசெம்பர் 12 வாக்கெடுப்புக்கு முன்னதாக தேர்தல் காலம் ஆரம்பிப்பதை குறிக்கும் வகையில் பக்கிங்ஹாம் அரண்மனையில் மகாராணியை சந்திப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் கொன்சர்வேட்டிவ் கட்சியினரும் தங்கள் பிரசாரத்தைத் ஆரம்பித்ததுடன், பிரதமர் ஜான்சன் பிரெக்ஸிற்றை நிறைவேற்ற முடியும் என்று உறுதியளித்தார்.

அதேவேளை, தொழிற்கட்சியின் கீழ் "உண்மையான மாற்றத்தை" உறுதியாகப் பெற முடியும் என்று ஜெர்மி கோர்பின் குறிப்பிட்டார்.




பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலோ அல்லது முறையாக சபை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டாலோ-நள்ளிரவுக்குப் பின்னர் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பொது உறுப்பினர்களாக மாறுகிறார்கள். அரச அமைச்சர்கள் மாத்திரம் தங்கள் பதவிகளை வகிப்பார்கள்.

ஒக்டோபர் 14 ஆம் திகதி பாராளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 19 நாட்கள் மட்டுமே அமர்வுகள் இடம்பெற்ற நிலையில், இந்த கலைப்பு இடம் பெறுகின்றது. கடந்த 70 ஆண்டுகளில் மிகக் குறுகிய பாராளுமன்றக் கூட்டத்தை இது குறிக்கின்றது. (2)

## ஐந்து வருடங்களாக மழை இல்லை புவி வெப்பமயமாதலுக்கு எச்சரிக்கை

(கேப் டவுண்)

கடந்த ஐந்து வருடங்களாக ஒரு துளி மழையையேனும் காணாத நிலம் உலகத்திற்கான ஓர் எச்சரிக்கையாக பார்க்கப்படுகின்றது. தென்னாபிரிக்காவின் பல நகரங்களின் நிலை தற்போது இவ்வாறுதான் உள்ளது.

ஒரு சமயத்தில் தினமும் 40 ஆயிரம் பேரின் தாகத்தைத் தீர்த்த அணை வறண்டு, ஒரு சொட்டு தண்ணீர் இல்லாமல் போய்விட்டது.

குடி தண்ணீர் இல்லை என்றால் ஒரு சமூகத்தில் என்னவெல்லாம் அசம்பாவிதங்கள் நடக்குமோ அதுவெல்லாம் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன.

குடிநீர் இன்றி கொத்துக் கொத்தாகக் கால்நடைகள் செத்து மடிவதுடன், ஒரு குடம் தண்ணீரைப் பிடிக்க ஒரு நாள் முழுவதும் காத்துக் கிடக்க வேண்டிய நிலைக்கு அங்குள்ள மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.


அணைகள் எல்லாம் வற்றிய பிறகு சில ஆழ்துளைக் கிணறுகள் மட்டுமே அந்த மக்களின் தாகத்தைத் தணிக்கின்றன.

ஆனால், அது மட்டுமே போதுமானதாக இல்லை. உண்மையில் இது மற்ற நாடுகளுக்கு ஓர் எச்சரிக்கை என்று சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தென்னாபிரிக்காவின் குறிப்பிட்ட இந்த பகுதி சர்வதேச சராசரியைவிட இரண்டு மடங்கு வெப்பமடைவதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

புவி வெப்பமயமாதலை ஏனைய நாடுகள் தடுக்கவில்லை என்றால் இந்த நிலை பிற இடங்களிலும் ஏற்படலாமென எச்சரிக்கை விடுத்துள்ளனர். (2)

# பேருந்து- டிப்பர் மோதி விபத்து; 2 சாரதிகள் உட்பட 30 பேர் காயம்



(மொனராகலை)

மொனராகலை, தனமல்வில குடா ஓயா பகுதியில் நேற்று முன்தினம் இரவு தனியார் பேருந்தும் டிப்பரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் இரு சாரதிகளும் 28 பயணிகளும் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# திரிபீடகத்தை உலக நினைவுப் பட்டியலில் உள்ளடக்குவதற்கான நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம்



(கொழும்பு)

திரிபீடகத்தை உலக நினைவுப் பட்டியலில் உள்ளடக்குவதற்கான விண்ணப்பப்படிவம் மற்றும் நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

இலங்கை பிக்கு பரம்பரையினரால் பேணிப் பாதுகாக்கப்பட்ட புத்த பகவானின் போதனைகளை உள்ளடக்கியுள்ள தேரவாத திரிபீடகம் ஜனாதிபதியால் 2019 பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி 2109/13 இலக்கம் கொண்ட விசேட வர்த்தமானி அறிக்கை மூலம் தேசிய மரபுரிமையாக பிரகடனப்படுத்தப்பட்டது.

2019 மார்ச் 23 ஆம் திகதி கண்டி தலதாமாளிகை வளாகத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் திரிபீடகத்தை உலக மரபுரிமையாக்குவதற்கான உத்தியோகபூர்வ கோரிக்கை இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் நிரந்தரப் பிரதிநிதி ஹெனார் சிங்கரிடம் முன்வைக்கப்பட்டதுடன், அதற்கமைய திரிபீடகத்தை உலக நினைவுப் பட்டியலில் உள்ளடக்குவதற்கான விண்ணப்பத்தை தயாரிக்கும் நிபுணர் குழுவும் நியமிக்கப்பட்டது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பாளி மற்றும் பௌத்த கற்கைப் பிரிவின் பிரதானி வண.பேராசிரியர் மெதகம்பிட்டிய விஜித தம்ம தேரரின் ஆலோசனைக்கமைய குழுவினரால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் குழுவின் இடைக்கால அறிக்கை நேற்று முன்தினம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.


நிபுணர் குழுவினால் கடந்த ஐந்து மாத காலமாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளையும் ஆவணப் பரிசோதனைகளையும் தொடர்ந்து ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட திரிபீடகம் இருக்கும் இடத்தை இனங்கண்டு, அவற்றைப் பாதுகாப்பதற்கான யோசனைகளும் இந்த இடைக்கால அறிக்கையினூடாக பரிந்துரைக்கப்பட்டது.

இந்த அறிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, இப்பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பொறுப்பு வாய்ந்த குழுவொன்றை நியமிக்கவுள்ளதாகவும் இந்தப் புனிதப் பணியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தேவையான தலையீடுகளை தான் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆளணிப் பிரதானி எச்.எம்.பி.ஹிட்டிசேகர, குழுவின் தலைவர் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் எசல வீரக்கோன் ஆகியோரும் நிபுணர் குழுவின் உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

## சஜித்,கோத்தா உறுதிமொழி

# எம்.சி.சிக்கு எதிரான உண்ணாவிரதத்தை கைவிட்டார் பிக்கு



(கொழும்பு)

அமெரிக்காவுடன் எம்.சி.சி. கொடை உடன்பாட்டில் அரசாங்கம் கையெழுத்திடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த பௌத்த பிக்கு, நேற்று முன்தினம் நள்ளிரவு தமது போராட்டத்தைக் கைவிட்டார்.

எம்.சி.சி. கொடை உடன்பாட்டில் அரசாங்கம் கையெழுத்திடக் கூடாது எனக் கோரி, வண. உடுதும்பர காஷ்யப்ப தேரர் என்ற பௌத்த பிக்கு, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று முன்தினம் காலை தொடக்கம் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்.

எம்.சி.சி.உடன்பாடு நாட்டின் நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று, உடுதும்பர காஷ்யப்ப தேரரின் ஆதரவாளர்கள் அறிக்கை ஒன்றில் கூறியிருந்தனர்.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக மிலேனியம் சவால்கள் உடன்பாட்டில் கையெழுத்திடப்படாது என அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை அடுத்து அவர் தமது போராட்டத்தைக் கைவிட்டார்.

அத்துடன், எம்.சி.சி.உடன்பாடு தொடர்பாக ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேம்தாஸவும் கோத்தபாய ராஜபக்ஷவும் உடுதும்பர காஷ்யப்ப தேரருக்கு தனித்தனியாக உறுதிமொழிக் கடிதங்களை வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## முயற்சி தேவை

ஊருக்கு வெளியே அமைதியான ஒரு இடம்.

அங்கே ஒரு ஆச்சிரமம். அங்கே ஒரு சாமியார். அவர் தினமும் நல்ல போதனைகளெல்லாம் செய்வார். பல பேர் போய் அங்கேயே சில நாள் தங்கியிருந்து அவர் சொல்கின்ற அறிவுரைகளை கேட்டுக்கொண்டு வருவது வழக்கம்.

ஒரு தடவை அவரைப் பார்த்து விட்டுப் போறத்துக்காக மூன்று வெளியூர் தம்பதிகள் வந்தார்களாம்.

அந்த மடத்திலேயே சாப்பிட்டுக் கொண்டு...தங்கியிருந்து அவருடைய போதனைகளைக் கேட்டுக்கொண்டு போக வேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம்.

காலையிலேயே குளித்து விட்டு பூஜையிலே உட்காந்தார் சுவாமி. இவர்களும் குளித்துவிட்டு பூஜையைப் பார்க்கிறதுக்காக அவர் முன்னால் உட்காந்தார்கள்.

பூஜை ஆரம்பமாகியது. சம்பிரதாயப்படி அது அதிக நேரம் நடந்து கொண்டே இருக்கு! இவர்களுக்கு நல்ல பசி, இருந்தாலும் இந்த நேரத்தில் அதை எப்படி வெளியே காட்டிக் கொள்கிறது? பேசாமல் இருந்தார்கள். அந்த சுவாமி பூஜையை முடித்தார். அதன் பின்பு பேச ஆரம்பித்தார். பேச்சு அருமையாகத்தான் இருந்தது. அமிர்தமாகத்தான் இருந்தது! இருந்தாலும் இவர்களுக்கு இருக்கிற பசி அதைச் சரியாகக் கவனிக்க விடவில்லை! அந்தச் சுவாமியோ அதைக் கவனிச்சதாகத் தெரியவில்லை! இவர்களுக்கு மனதில் ஒரு எண்ணம்.

உள்ளே சாப்பாடு தயாராகிக் கொண்டிருக்கும் போல இருக்கும்...இந்தப் பேச்சு முடிந்ததும் எங்களை உள்ளே அழைத்துக் கொண்டு போவார் என ஒரு நினைப்பு! ஆனால் சுவாமி இதைப் பற்றி எதுவுமே பேசவுமில்லை, கண்டு கொள்ளவுமில்லை!

ஒரு அம்மாவால் அதுக்கு மேலை சும்மா இருக்க முடியவில்லை... சாப்பாட்டைக் கவனிக்கலாமா? என்று மெதுவாக ஆரம்பிச்சார். ஓ... கவனிக்கலாமே என்று உள்ளே அழைத்துக் கொண்டு போனார் சுவாமி. இவர்கள் அவசரமாக எழுந்து உள்ளே ஓடினார்கள். அங்கே ஒரு மேசை மேலே கிண்ணம் மூடியிருந்தது! ஓ.... இதுதான் சாப்பாட்டு மேசை போல இருக்கு ... இங்கே சாப்பாடு வந்திடும் என்று நினைத்தார்கள். உடனே போய் சுற்றி உட்காந்து கொண்டார்கள்.

சுவாமி அந்தக் கிண்ணத்தை எடுத்து அம்மாவிடம் கொடுத்தார். அவர் அதை எடுத்து மூடியைத் திறந்து பார்த்தார். உள்ளே ஒரு சாவியிருந்தது.

ஓ சரிதான்...இது சமையலறைச் சாவி போல இருக்கு... அங்கே போய் அதைத்திறந்து...சாப்பாட்டை நாமே எடுத்துக் கொண்டு வந்து இங்கே வைத்துச் சாப்பிட வேண்டும் போல இருக்கு என்று நினைத்தார்.

சாவி இருக்கு இல்லையா? வாங்க பூட்டின அறையைக் காட்டுகிறேன் என்று சுவாமி அவர்களை அழைத்துக்கொண்டு போய் காட்டினார்.

இவர் அந்த அறையை ஆவலோடு திறந்தார். உள்ளே பார்த்தால் அங்கே...அரிசி, பருப்பு, விதவிதமான காய்கறிகள் எல்லாம் இருக்கின்றன. சமையலுக்கு வேண்டிய மிளகாய், எண்ணெய், பால், தயிர், நெய் இப்படி எல்லாமே இருக்கின்றன. அடுப்பு, விறகு, தீப்பெட்டி கூட அங்கே இருக்கின்றன.

சாப்பாடு தயாராக இருக்கும் என்று நினைத்துக்கொண்டு போன இவர்கள் இதையெல்லாம் பார்த்து சோர்ந்து போய் விட்டார்கள்.

சுவாமி என்ன இது? சாப்பாடு இல்லையா? என்றார்கள். அது தான் சாப்பாட்டுக்கு வேண்டிய எல்லாமே இங்கே இருக்கே. அடுப்பு மூட்டி... நீங்கதான் அவரவர் ருசிக்கு தகுந்த மாதிரிச் சமைத்துக் கொள்ள வேண்டும். இந்த சந்நியாசிக்கு எப்படிச் சமைக்கத் தெரியும் என்று கேட்டார் சுவாமி.

சாப்பாடு தயாராக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம் என்றார்கள். இவர்கள் நீங்கள் இப்படி சொல்லுவீர்கள் என்று நானும் எதிர்பார்த்தேன். இதுவரைக்கும் நான் எவ்வளவோ தத்துவமெல்லாம் எடுத்துச் சொன்னேன். எல்லாத்தையும் விட இதுதான் அனுபவபூர்வமான தத்துவம். ஆண்டவன் நமக்கு நல்ல மனதைக் கொடுத்திருக்கின்றான். நல்ல வாய்ப்புக்களையும் தந்திருக்கிறான். அதையெல்லாம் பயன்படுத்தக்கூடிய மூளையையும் சிந்தனையையும் கொடுத்திருக்கிறான். ஆனாலும் அடுப்பை நீங்கள்தான் பற்ற வைக்க வேண்டும். உங்களுக்கு உகந்ததை நீங்கள்தான் சமைத்து, ருசித்து அனுபவிக்க வேண்டும். ஆண்டவன் அதைச் செய்ய மாட்டான் என்றாராம் அந்தச் சுவாமி.

நம்முடைய வாழ்க்கையில் நல்ல பலன்களைப் பெற நாம்தான் முயற்சி செய்ய வேண்டும். அதற்குரிய சூழ்நிலையைக் கடவுள் தான் கொடுப்பார். அதை விளக்கிறத்துக்காகத்தான் அந்த சுவாமி அப்படி செய்து காட்டினார் என்று விளக்கம் கொடுத்தார் ஒரு பெரியவர். அதன் பின்பு அந்த மூன்று தம்பதிகளும் தெளிவடைந்தார்களாம். நாம் தெளிவடைவது எப்போது? இந்தக் கதையை என்னுடைய நண்பன் ஒருவரிடம் சொன்னேன் அவன் ரொம்ப சந்தோசப்பட்டான்.

நீங்கள் சொல்லுவது சரி சேர். ஆனாலும் நான் அதைவிட ஒரு படி மேலே சேர்.... எனக்கெல்லாம் அரிசி, பருப்பு இருக்கிற ரூம் எது என்று கையைக் காட்டினால் போதும் கிண்ணத்திலேயிருந்து சாவியை எடுத்துக் கொடுக்க வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை சேர் என்று சொன்னான். பின்பு எப்படிடா ரூமைத் திறப்பாய் என்று கேட்டேன். பூட்டை உடைத்து திறந்திடுவேன் சேர். அதுதான் எனக்குப் பழக்கம் என்றான்.

# காணாமற் போனவர்களின் வலிக்கு மருந்து கொடுக்கமுடியாவிட்டாலும்
# உறவினர்களின் வாழ்வுக்கு மருந்து கொடுப்பேன்

## அங்கஜன் வாக்குறுதி

(யாழ்ப்பாணம்)

காணாமற்போன உறவுகளின் வலிக்கு மருந்து கொடுக்க முடியாவிட்டாலும் நீதி கிடைக்கும் வரை போராடும் அவர்களின் உறவினர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு ஆதரவு கொடுக்கத் தான் தயாராகவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல்போன உறவுகளைத்தேடி அவர்களின் உறவினர்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தமது அன்றாட வாழ்க்கையை நடத்தும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளையோ அல்லது சமூக நெருக்கடி நிலைமைகளையோ தீர்ப்பதற்கு யாரும் முன்வராத நிலையில் அவர்களின் தேவைகள் குறித்து நான் முழுக் கவனம் செலுத்துவேன்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவு அளித்த நிலையில் நானும் எமது மக்கள் தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷவிடம் திடமான கொள்கைகளை முன்வைத்துள்ளேன்.

தந்தையை இழந்த பிள்ளைகள், அண்ணனை இழந்த தங்கை, கணவனை இழந்த மனைவி என வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் போர்க்கால வடுக்கள் இன்னும் மறையவில்லை.

நானும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் கடந்த 4 ஆம் திகதி திங்கட்கிழமை காணாமற் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த உறவினர்களை யாழில் சந்தித்தோம்.

இச் சந்திப்பில் மனதை உருக்கும் பல்வேறு சம்பவங்களை உறவினர்கள் மூலம் அறிந்து கொண்டோம். யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்தநிலையில் காணாமற்போனவர்களின் குடும்பங்கள் தமது அன்றாட வாழ்க்கையைக் கூட கொண்டு நடத்த முடியாத சூழ்நிலையில் உள்ளன.



அரசாங்கத்தால் வழங்கப்படும் வீட்டுத் திட்டம், வாழ்வாதார உதவிகள், சமுர்த்தி, தொழில் வாய்ப்புக்கள் கிடைக்காத நிலையில் சமூகத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

யுத்தம், யுத்தத்தால் ஏற்பட்ட இழப்புக்களின் வலிகள் ஆறாத எமது சமூகத்தின் பார்வையும் அரசியல்வாதிகளின் மெத்தனப் போக்கும் எம்மைக் காட்சிப் பொருட்களாகவே கருதும் நிலை காணப்படுவதாகத் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில் நாம் அவர்களின் கோரிக்கைகளையும் ஆதங்கங்களையும் கருத்தில் கொண்டு எமது ஆட்சியில் இலங்கையில் காணாமற் போனவர்கள் தொடர்பில் ஓர் பொது வான திட்டத்தைத் தயாரிக்கவுள் ளோம்.

அதுமட்டுமல்லாமல் இறுதியுத்தத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் முடியும் வரை அவர்களின் வாழ்க்கைத் தரத்தைப்பாதுகாக்கும் உறுதியான ஓர் செயற்றிட்டத்தை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் உதவியுடன் நான் முன்னின்று செயற்படுத்துவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-10)

# குண்டுத் தாக்குதல் குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை
# ஹேமசிறி மற்றும் பூஜிதவிற்கு மீண்டும் விளக்கமறியல்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் கட்டாய விடுமுறை வழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோரின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுப் புதன் கிழமை கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.


இதன்போதே குறித்த இருவரையும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.



உயிர்த்த ஞாயிறு அன்று நடத்தப்பட்ட குண்டும் தாக்குதலைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்காதமை காரணமாக இவர்கள் இருவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதனையடுத்து கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த இருவரும் மேல் நீதிமன்ற உத்தரவையடுத்து, கடந்த 9 ஆம் திகதி மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வீதியைப் புனரமைக்க கோரிக்கை



(கரணவாய்)

கம்பெரலியத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதியொன்று பயணிக்க முடியாத அளவிற்கு சேதமடைந்து காணப்படுவதால் பெரும் சிரமத்திற்குள்ளாவதாக குடமியன் பகுதி மக்கள் குற்றம் சாட்டினர்.

வடமராட்சி வரணிகுடமியன் பகுதியில் கடந்த மாதம் புனரமைக்கப்பட்ட வீதியே இவ்வாறு சேதமடைந்து காணப்படுவதாகவும் எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். (இ-7-60)

# தேர்தலில் சிறந்த தீர்வு கிடைத்தவுடன்
# தயாசிறியை முதலில் விரட்டியடிப்போம்

## வெல்கம திட்டவட்டம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிறந்த தீர்வு கிடைக்கப் பெற்றால் தயாசிறியையே முதலில் விரட்டியடிப்போம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் கொழும்பு - சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சந்திரிகா குமாரதுங்கவுக்கு பின்னர் நானே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பற்றிப்பேசுவதற்கு தகுதியுள்ள சிரேஷ்ட உறுப்பினராவேன். சிறிமாவோ பண்டாரநாயக்க எனக்கு அகவத்தை தொகுதியை வழங்கி 38 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

மிக நீண்டகாலம் நான் சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக இருந்திருக்கின்றேன். முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க 1951 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்பினார். டீ.எஸ்.சேனநாயக்க உயிரிழந்ததன் பின்னர் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராகச் செயற்பட்ட பண்டாரநாயக்கவுக்கு எந்தப் பதவியும் வழங்கப்படவில்லை என்பதாலேயே அவர் ஐ.தே.கவிலிருந்து பிரிந்து சு.கவை ஸ்தாபித்தார்.





கட்சி உருவாக்கப்பட்டு முதலாவது தேர்தலில் 8 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. 1957 ஆம் ஆண்டு மீண்டும் பாரிய வெற்றி கிடைக்கப்பெற்றது. மிகக் குறுகிய காலத்தில் அவர் பல நன்மைகளைச் செய்திருக்கிறார். 1959 ஆம் ஆண்டு அவர் கொல்லப்பட்டதன் பின்னர் சிறிமாவோ பண்டாரநாயக்கவே கட்சியை முன்னோக்கிக் கொண்டு சென்றார்.

நான் இன்று அரசியலில் வெற்றி பெற்றிருப்பதற்கும் அவரே காரணமாவார். நான் மாத்திரமல்ல மகிந்த மற்றும் மைத்திரி ஆகியோரையும் அவரே உருவாக்கினார்.

சிரேஷ்ட தலைவியாக எமக்கு முறையான அரசியலைக் கற்றுக் கொடுத்தார். தனது குடியுரிமை நீக்கப்பட்ட போதிலும் கட்சியை வெற்றிப் பாதையில் கொண்டு சென்றார். எனவே சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கிறது.

ஆனால் தற்போது அவ்வாறல்ல. வெவ்வேறு கட்சிகளிலிருந்து சுதந்திரக் கட்சியில் இணைந்தவர்கள் தற்போது கட்சியின் வரலாறு பற்றிப் பேசுகிறார்கள். அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. நாமே சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்போம்.

அத்துடன் இந்த மாநாட்டில் கலந்து கொண்ட உறுப்பினர்களின் பதவிகள் அல்லது உறுப்புரிமை நீக்கப்படும் என்று யாரும் அச்சமடையத் தேவையில்லை. சந்திரிகா குமாரதுங்கவுடன் நானும் இணைந்து முன்னின்று அனைவரையும் பாதுகாப்போம். அச்சமின்றி அனைவரும் எம்முடன் ஒன்றிணையுங்கள். இதுவே எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள இறுதி வாய்ப்பாகும்.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகக் கூறும் கட்சி செயலாளருக்கு எதுவும் செய்ய முடியாது. இவ்வாறானவர்கள் எத்தனை கட்சிகளுக்கு தாவியிருக்கிறார்கள்? அவர்களால் சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியுமா? தந்தையும் தாயும் கட்டியெழுப்பிய இந்தக் கட்சியிலிருந்து சந்திரிகா குமாரதுங்க நீக்கப்படுவார் என்று தயாசிறி ஜெயசேகர கூறுகிறார். "இந்தத் தேர்தலில் சிறந்த தீர்வு எமக்குக் கிடைக்கப் பெற்றால் காதைப் பிடித்து நாமே உங்களை கட்சியிலிருந்து அப்புறப்படுத்துவோம்" என்பதை தயாசிறிக்கு தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் மேலும் கூறினார். (இ-7)

# குளவிக்கூட்டை கலைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## பரு.பிரதேச செயலாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

மந்திகைச் சந்தைப் பகுதியில் உள்ள குளவிக் கூட்டை கலைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மந்திகை பகுதியில் உள்ள பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சந்தைப் பகுதியில் குறித்த குளவிக்கூடு காணப்படுகிறது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் உத்தரவின் பேரில் குறித்த குளவிக்கூட்டை கலைப்பதற்குரிய சிபாரிசுக் கடிதங்கள் யாழ்.மாநகரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(இ-10-60)

# குண்டுத் தாக்குதல் விசாரணையிலும் அரசியல் லாபம் தேடும் எதிர்க்கட்சி

## ஹக்கீம் குற்றச்சாட்டு

(திகன)

குண்டுத் தாக்குதல் பற்றி விசாரணை நடத்திய பாராளுமன்றத் தெரிவுக்குழு அங்கத்துவத்தை புறக்கணித்துவிட்டு, இப்போது புதியதொரு குழுவை நியமிக்கின்றனர். எங்களது அறிக்கையில் உண்மைக்குப் புறம்பான ஏதேனும் விடயங்கள் இருக்கின்றதா? என்று முதலில் பாருங்கள். எல்லாவற்றிலும் அரசியல் இலாபம் தேடுவது எதிர்க்கட்சிக்கு பழக்கப்பட்டுவிட்டது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டினார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நேற்று முன்தினம் கண்டி திகன பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பார்த்ததும் மற்றும் கேட்டதுமான சாட்சியங்களைப் பதிவுசெய்து பரிந்துரைகளைச் சரியாகப் பெற்றுக் கொடுத்தோம். புலனாய்வுப் பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்கள் தேவையான நேரத்தில் முன்வைக்கப்படவில்லை எனில், அதன் சேதங்களுக்கு யார் பொறுப்புக்கூற வேண்டும் என்பதைத் தெளிவாகப் பரிந்துரை செய்துள்ளோம்.

அரச தலைவர்களும் தங்கள் கடமைகளிலிருந்து ஓரளவுக்கு தவறியிருந்தாலும் அதுபற்றியும் தெரிவுக்குழு அறிக்கையில் குறிப்பிட்டோம். பொறுப்புடன் நடந்து கொள்ளும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் நாட்டின் பாதுகாப்புக்காக அனைவரும் ஒன்றிணைவது வழக்கம் ஆனால், எதிர்க்கட்சிலுள்ள மொட்டு அணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தெரிவுக்குழு அங்கத்துவத்தை பகிஷ்கரிப்புச் செய்தன.

நாட்டின் பாதுகாப்புக்கு பாரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில், கட்சிபேதம் பாராமல் அனைவரும் ஒன்றிணைவது தேசிய மட்டத்தில் சாதாரணமாக நடக்கின்ற நிகழ்வாகும். ஆனால், எமது நாட்டில் அவ்வாறு நடைபெறவில்லை. எல்லாவற்றிலும் அரசியல் செய்கின்றனர். எதிரிகள் மீது எப்படி குற்றம் சுமத்தலாம் என்று மாத்திரமே பார்க்கின்றனர். அரசாங்கத்தின் மீது எல்லாவற்றையும் சுமத்திவிட்டு தப்பிக்கவே பார்க்கின்றனர்.

நாம் உண்மையைக் கண்டறிவதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்தபோது சுதந்திரமாக எமக்கு வேண்டிய எந்தக் கேள்வியையும் கேட்க முடியும். அதற்குத்தான் தெரிவுக் குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. பாராளுமன்றத்தில் எல்லாக் கட்சிகளுக்கும் தெரிவுக்குழுவில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது. ஆனால், எதிர்க்கட்சியினர் அதனை நிராகரித்து குறுகிய அரசியல் இலாபம் தேடிக்கொண்டனர். இப்போது புதிதாக இன்னொரு குழுவை நியமிக்கின்றனர்.

எங்களது பாராளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கையை என்னவென்று முதலில் பாருங்கள். நாம் முன்வைத்த சாட்சியங்களுக்கு புறம்பாக, ஏதேனும் சொல்லப்பட்டிருக்கிறதா? என்று பாருங்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சி என்றாலும் சரி, எதிர்க்கட்சி என்றாலும் சரி, முதலில் நாட்டைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். எல்லாவற்றிலும் கீழ்த்தரமான அரசியல் இலாபத்தை நாடுவது எதிர்க்கட்சிக்கு பழக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அல்வாய் இ.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் ந.இராசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய ஆரம்பக் கல்விப் பணிப்பாளர் செ.அன்ரனி ஜோஜ், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் க.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம்வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று 7 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி அபிராமி சிவபவன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக உலக தரிசன நிறுவனத்தின் சங்கானை பிரதேச திட்ட முகாமையாளர் அ.ஜூட் நிசாந்தன், சிறப்பு விருந்தினர்களாகப் பாடசாலை பழைய மாணவர்களான செ.மனுவேந்தன் (கனடா), ச.சச்சிதானந்தம் (நெதர்லாந்து) ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-5-7)

# யாருடைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படாத வேட்பாளர் சஜித்

## சம்பிக்க கூறுகிறார்

(கொழும்பு)

தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கின்றது.

ஆனால் அவர்களுடைய 13 அம்சக் கோரிக்கைகள் தொடர்பில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படவில்லை. எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை.

அக்கோரிக்கைகளை எல்லோரிடமும் கையளித்த போதிலும் அதற்கு முறையான பிரதிபலிப்பு காட்டப்படாமையால் அம்முயற்சியைக் கைவிட்டுள்ளதாக சுமந்திரன் கூறினார்.

எனவே சஜித் பிரேமதாஸ யாருடைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படாத ஒரு சுதந்திர வேட்பாளராவார் என்று பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக தெரிவித்தார்.

"சஜித்தின் சமுதாயப்புரட்சி" என்ற தலைப்பில் கொழும்பிலுள்ள இலங்கை மன்றக்கல்லூரியில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் சமுதாயப்புரட்சியில் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பான கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அதனை இவ்வார இறுதியில் நாட்டிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம். அந்தவகையில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் பாரியதொரு சமூக மறுசீரமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

போதைப்பொருள், இலஞ்சம்-ஊழல் மற்றும் மத அடிப்படைவாதம் ஆகிய மூன்று விடயங்களுக்கு எதிராகவும் பாரிய யுத்தமொன்றை அவர் முன்னெடுக்கவிருக்கின்றார். அதேபோன்று நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் உபாயங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை கடந்த 2010 - 2014 வரையான காலப்பகுதியில் நாடு பாரிய கடன் பொறிக்குள் சிக்கிக் கொண்டது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் வருமானம் 23 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்ட அதேவேளை, வெளிநாடுகளிடமிருந்து பெற்ற கடன் தொகை 18 பில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது.

அக்கடன் தொகையில் பெருமளவான தொகையை நாம் இவ்வருடத்திலேயே மீளச்செலுத்தினோம். இந்நிலையில் நாம் அறிவை மையப்படுத்திய பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் திட்டமிட்டிருக்கின்றோம்.

அதேபோன்று அரசியலிலும் குறிப்பிடத்தக்க மறுசீரமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டியுள்ளது. எமது நாட்டு மக்கள் 1931 ஆம் ஆண்டிலிருந்து சர்வஜன வாக்குரிமையைப் பயன்படுத்தி கடந்த காலங்களில் பல்வேறு அரசாங்கங்களை உருவாக்கியிருக்கின்ற அதேவேளை, மேலும் பல அரசுகளைக் கவிழ்த்திருக்கின்றனர். அதனூடாக புதிய யுகமொன்றை உருவாக்கும் வாய்ப்புக்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இவ்வடிப்படையில் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் சஜித் பிரேமதாஸ நாட்டில் பாரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தி, புதிய யுகமொன்றைக் கட்டியெழுப்புவார். அரசியலுள்ள இலஞ்சம், ஊழல் போன்ற புற்றுநோயை ஒழித்து, சீரானதொரு அரசியல் கலாசாரத்தைத் தோற்றுவிப்பார்.

மேலும் தற்போது இலங்கையில் மாத்திரமன்றி உலகளவில் சூழல் வெப்பமடைதல் பாரிய பிரச்சினையாக மாறியிருக்கின்றது. இத்தகைய சுற்றாடல் பிரச்சினைகளின் காரணமாக இந்தோனேசியா அதன் தலைநகரை மாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

எனவே இத்தகைய சுற்றாடல் சார்ந்த சவால்களை எதிர்கொள்வதற்கான கொள்கைத் திட்டங்களும் சஜித் பிரேமதாஸவால் முன்வைக்கப்பட்டுள்ளன.

**கேள்வி :** மிலேனியம் சவால்கள் உடன்படிக்கையில் கையெழுத்திடுவதைத் தவிர்க்குமாறும் அதற்கு எதிராகவும் சட்டத்தரணிகள் சங்கம் கருத்து வெளியிட்டுள்ளதே?

**பதில் :** இன்னமும் மிலேனியம் சவால்கள் உடன்படிக்கை கைச்சாத்தாகவில்லை. இது ஒரு ஜனநாயக நாடு. எமது அரசாங்கமும் ஜனநாயகத்தன்மை வாய்ந்தது. தற்போது மிலேனியம் உடன்படிக்கையின் விபரங்கள் அனைத்தும் இணையத்தில் பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ளன. எனவே மக்களும் அதன் உள்ளடக்கம் தொடர்பில் அறிய முடியும்.

அதேபோன்று பாராளுமன்றத்திலும் இவ்வுடன்படிக்கை குறித்த விவாதம் மேற்கொள்ளப்படும் போது ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் குறிப்பிட முடியும். ஆனால் பொய்யான பிரசாரங்களைக் கேட்டு மக்கள் ஏமாறக் கூடாது.

மிலேனியம் சவால்கள் உடன்படிக்கையின் மூலம் எவ்வித யுத்த மற்றும் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்றும் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களை மேற்கொள்ள முடியாது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கேள்வி :** புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறீர்கள்?



**பதில் :** கடந்த 2015 ஆம் ஆண்டில் நாம் ஆட்சியைப் பொறுப்பேற்றுக்கொண்ட போது அரசியலமைப்பில் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்ததுடன், மேலும் பல முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தினோம். அதற்கு அனைத்துக் கட்சிகளினதும் அனுமதியும் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

அதேபோன்று புதிய அரசியலமைப்பை உருவாக்குவதெனின் அதனை நாம் மாத்திரம் தனித்துச் செய்யப்போவதில்லை. அதற்கும் அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவு பெறப்படும்.

எதிர்வரும் மார்ச் மாதம் உருவாகின்ற புதிய பாராளுமன்றத்தில் முற்றாக நிறைவேற்றதிகாரத்தை ஒழித்தல், அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்தல், தேர்தல் முறையில் மாற்றம் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான வாய்ப்புள்ளது.

**கேள்வி :** தற்போது தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கிறது. அதன் 13 அம்சக் கோரிக்கைளை ஏற்றுக்கொண்டதன் விளைவாகவே அவர்கள் ஆதரவு வழங்க முன்வந்திருப்பதாகக் கூறப்படுகின்றதே?

**பதில் :** தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கின்றது.

ஆனால் அவர்களுடைய 13 அம்சக் கோரிக்கைகள் தொடர்பில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படவுமில்லை. எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவுமில்லை.

அக்கோரிக்கைகளை எல்லோரிடமும் கையளித்த போதிலும் அதற்கு முறையான பிரதிபலிப்பு காட்டப்படாமையால் அம்முயற்சியைக் கைவிட்டுள்ளதாக சுமந்திரன் கூறினார்.

எனவே புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் களமிறக்கப்பட்டுள்ள சஜித் பிரேமதாஸ ஒரு சுயாதீனமான வேட்பாளராவார். எனது கட்சியான ஜாதிக ஹெல உறுமயவும் அவருக்கு எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை.

அவர் யாருடைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படாத ஒரு சுதந்திர வேட்பாளராவார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


"எனது வார்த்தைகளில்
எனது செயல்களையும்
காண்பீர்கள்"
- கோட்டாபய ராஜபக்ஷ
வீதிகளை விஸ்தரித்தல்
மன்னார் பாலம்
நீர்ப்பாசன வசதியை
ஏற்படுத்தல்
நெடுங்கேணி - புதிய நீர்த்தாங்கி
குடியிருப்புத் திட்டங்களை
அமைத்தல்
வவுனியா - மீள்குடியமர்வு
வடக்கின்
மீள் எழுச்சி
ஓமந்தை
OMANTHA
சுகாதார
வைத்தியசாலைகளை
மீள் நிர்மாணித்தல்
முல்லைத்தீவு - மாவட்ட பொது வைத்தியசாலை
பாடசாலைகளை
புனர்நிர்மாணித்தல்
கிளிநொச்சி - இந்துக் கல்லூரி
இரயில் பாதைகளை மறுசீரமைத்தல்
ஓமந்தை - இரயில் நிலையம்
(சி-106)
ගෝඨාභය රාජපක්ෂ
கோட்டாபய ராஜபக்ஷ
Gotabaya Rajapaksa
தேசத்திற்குப் பொறுப்பு கூறும்
கோட்டாபய

# எம்.சி.சி. உடன்படிக்கையால் பாதிப்பு என்னவென்பதை வெளிப்படுத்துமாறு மகிந்தவுக்கு மங்கள மீண்டும் சவால்



(கொழும்பு)

மிலேனியம் சவால்கள் உடன் படிக்கையால் நாட்டுக்கு அல்லது மக்களுக்கு எத்தகைய தீங்கு ஏற்படும் என்பதை வெளிப்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பொது ஜன பெரமுனவின் தலைவர்களுக்கு நிதியமைச்சர் மங்கள சமரவீர மீண்டும் சவால் விடுத்தார்.


மிலேனியம் சவால் ஒப்பந்தம் குறித்து நிதி அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள விஷேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சவால் விடுத்தார்.

அமெரிக்காவுடன் கைச் சாத்திடுவதற்குத் திட்டமிட்டிருக்கின்ற மிலேனியம் சவால்கள் உடன் படிக்கையால் நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று கூறுகின்ற எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, எத்தகைய பாதிப்பு ஏற்படும் என்று தெளிவுபடுத்தவில்லை.

மாறாக அமெரிக்காவால் அழிவு ஏற்படும் என்பது போன்ற மாயையை உருவாக்க முயற்சிக்கின்றார். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில் மக்களை தவறாக வழிநடத்தாமல், மிலேனியம் சவால்கள் உடன்படிக்கையால் நாட்டுக்கு அல்லது மக்களுக்கு ஏற்படும் தீங்கு என்ன என்பதை வெளிப்படுத்துமாறு எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் அனைவருக்கும் சவால் விடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நான் காட்டிக்கொடுக்கவில்லை

## கருணா விளக்கம்



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தை பேச்சுவார்த்தையின் மூலம் முடிவுக்கு கொண்டுவர முடியும் என்ற காரணத்தினால் தான் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறினேன் என முன்னாள் பிரதியமைச்சரான விநாயக மூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்தார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை நான் காட்டிக் கொடுத்ததாக கூறப்படுவது மிகவும் தவறான விடயமாகும்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தை பேச்சுவார்த்தையின் ஊடாக முடிவுக்கு கொண்டு வர முடியும் என்ற நோக்கத்துடனே நோர்வே போன்ற நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த ஆரம்பித்தேன்.

மேலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அப்பாவி உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு எண்ணத்தை கொண்டிருந்தேன்.

எனினும், எனது அந்த நிலைப்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விரும்பவில்லை. அதனால் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நான் வெளியேறினேன்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை கருணா அம்மான் மாத்திரமே காட்டிக் கொடுத்தார் என விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் ஒருபோதும் கூறவில்லை.

ஆனாலும் விடுதலைப் போராட்டம் தொடர்பாக அறியாத சிலரே, நான் தான் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்ததாக பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனர்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முன்னாள் நகரசபை தவிசாளரின் விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

(தங்கல்ல)

தங்கல்ல நகர சபையின் முன்னாள் தவிசாளரும் தற்போதைய நகர சபை உறுப்பினருமான அனில் செல்லஹென்னதியை எதிர்வரும் 13ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

தங்கல்ல நீதவான் நீதிமன்றின் நீதிபதி லிலந்த வருஷவிதான முன் நேற்று குறித்த நபர் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டு தங்கல்ல நகர சபை தவிசாளராக இருந்த போது 6 இலட்சம் பெறுமதியான தீயணைப்பு கருவிகளை நகர சபைக்கு திருப்பி வழங்காமையும், ஒரு ஆரம்ப பள்ளிக்கு வழங்கப்பட்ட பல்லூடக இயந்திரம் தொடர்பில் இடம்பெற்றுள்ள மோசடி குற்றச்சாட்டுகளுக்கு அமைவாக குறித்த நபருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நிறுவுநர் நினைவும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

கரணவாய் தாமோதர வித்தியாசலய நிறுவுநர் நினைவும் பரிசளிப்பு விழாவும் நாளை 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் ஆ.விமலராஜா தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன்,கௌரவ விருந்தினராக நிறுவுநர் குடும்ப உறுப்பினர் த.சசிதரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-9)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1881

## காந்தறூபன்



எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாமல் பேசும் அன்பு எவ்வளவு விலை கொடுத்தாலும் கிடைக்காத அன்பு அண்ணன் தங்கை உறைவிடம் மட்டுமே உள்ளது!

## பூஜா



மௌனமும் சிரிப்பும் மிகவும் சக்தி வாய்ந்தவைகள்... மௌனம் நிறைய பிரச்சினைகளை குறைத்திடும், சிரிப்பு நிறைய பிரச்சினைகளை தீர்த்து விடும்!

## விதுஷனா




## சந்தியா




## நிஷா



பத்து செல்பி எடுத்தா அதுல ஒன்னு, ரெண்டு தான் நமக்கே புடிக்குது...
அதுமாதிரி தான் வாழ்க்கையும், மொத்தமும் நமக்கு புடிச்ச மாதிரியே இருக்கனும்னு ஆசைப்படக்கூடாது...

## வித்தியா

அம்மா: வாஸ்கொடகாமா யாருன்னு தெரியுமா?
பையன்: தெரியாது...



பையன்: பரிமளா ஆண்டி யாருன்னு தெரியுமா?
அம்மா: தெரியாது...
பையன்: மொதல உன் புருஷன் மேல கவனம் செலுத்து...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிறுவர் அரங்கம்

## கணபதிக்கும் ஒன்று கந்தனுக்கும் ஒன்று



தேவலோகத்தில் பார்வதியும் பரமசிவனும் பேசிக் கொண்டிருந்தனர்.

தங்கள் பிள்ளைகளில் யார் புத்திசாலி என்பதை ஒரு சோதனை வைத்துக் கண்டு பிடிப்போம் என்று.

அதன்படி சிவன் தன் பிள்ளைகளான கணபதி, கந்தன் இருவரையும் கூப்பிட்டார்.

'பிள்ளைகளே உங்களில் யார் சூழ்நிலைக்குத் தக்கபடி புத்திசாலித்தனமாகச் செயற்படுகிறீர்களோ அவருக்கு பரிசாக மாம்பழம் தருவேன்.

போட்டி இதுதான் உங்களில் யார் முதலில் உலகத்தைச் சுற்றி வருகிறீர்களோ அவருக்கே பரிசு' என்றார்.

கணபதியும் கந்தனும் அப்படியே செய்கிறோம் தந்தையே என்று சொல்லி விட்டுச் சென்றனர்.

சிறிது நேரம் கழித்து கணபதி வர, அதற்குப் பிறகு கந்தன் வந்தார்.

'என்ன உங்களில் யார் முதலில் உலகைச் சுற்றி வந்தவர்' சிவன் கேட்க,

'நான் தான் தந்தையே என்னுடைய மயில் மீது ஏறி முதலில் வலம் வந்தேன். ஆனால் அண்ணன் எப்படி எனக்கு முன்னால் இங்கு?' என கந்தன் கேட்க

கணபதி சிரித்தபடி, 'நான் தான் முதலில் சுற்றி வந்தேன். ஒவ்வொருவருக்கு பெற்றெடுத்த தாய், தந்தையர் தானே உலகம். அதனால் நான் அம்மையப்பனைச் சுற்றி வந்தேன். இது உலகத்தையே சுற்றி வந்த மாதிரி. எனவே எனக்குத்தான் பழம்' என்றார்.

'இல்லை இதை நான் ஏற்க மாட்டேன். தந்தை சொன்னது அகில உலகத்தையும் சுற்றி வர வேண்டும் என்று. நீ செய்ததை நான் ஒப்புக் கொள்ள முடியாது என கந்தன் வாதிட,

பார்வதி தேவி இதென்ன சோதனையெனக் கலங்க, சிவன் மட்டும் புன்முறுவலுடன் கணபதிக்கு ஒன்று, கந்தனுக்கு ஒன்று என இரண்டு மாம்பழங்களை ஆளுக்கு ஒன்றாகத் தந்தார்.


'தந்தையே அண்ணனுக்கு பழம் தந்தது எனக்கு வருத்தமில்லை. ஆனாலும் ஜெயித்தவன் நான் தானே சொல்லுங்கள்' என கந்தன் கேட்க,

சிவன், 'குழந்தைகளே ஜெயித்தது நீங்கள் இருவருமேதான்' என்றதும் பிள்ளைகளோடு பார்வதியும் சேர்ந்து குழம்ப,

'ஒருவனுக்கு உயிர்கொடுத்து அவனை உருவாக்கி, கல்வி கேள்விகளில் சிறக்கச் செய்வது அவன் தாய், தந்தையர். அவனுக்கான உலகத்தை வடிவமைத்துக் கொடுப்பது அவர்கள்தான். அதனால் பெற்றவர்களைத் தன் உலகமாக நினைப்பது சரியே. இது உணர்வுபூர்வமானது. உலகவழக்கமானது. இதைத் தான் கணபதி செய்தான். அதே நேரம் உலகம் என்றதும் அண்டசராசரங்களையும் கோள்களையும் அடக்கியதுதான் உலகம் என்பது கந்தனின் வாதம். இதுவும் சரியே. இது பிராக்டிக்கல் லாஜிக்.

இருவரும் அவரவர் கோணத்தில் சிந்தித்து செயற்பட்டனர்கள். ஒரே மாதிரி சிந்தித்து முன்னும் பின்னுமாக வந்திருந்தால் ஒருவர் மட்டுமே வென்றதாகக் கூறியிருப்பேன். வெவ்வேறு கோணத்தில் சுயமாக சிந்தித்து செயற்பட்டதால் என்னைப் பொறுத்தவரை இருவருமே வெற்றி பெற்றவர்கள்தான். என்ன தேவி என் வாதம் சரியா' என வினவ எப்படியோ இரண்டு பேருக்கும் சண்டை வராமல் பழம் கிடைத்ததே என்று அந்தத் தாயுள்ளம் ஆமோதித்தது.

## கீரிமலைக்குச் சென்றோம்



கீரி மலைக்குச் சென்றோம்
கேணி யில்நாம் குளித்தோம்
நீரின் மேலே நீந்தி
நீரை எற்றி மகிழ்ந்தோம்


நகுலேஸ் வரரின் கோயில்
சென்று வணங்கி நின்றோம்
நகுல முனிவர் கதையைக்
கேட்டு நாமும் அறிந்தோம்

நீலக் கடலின் நீளம்
அளக்க முயன்று சோர்ந்தோம்
பாலைப் போன்ற மணலை
எண்ணி எண்ணிக் களைத்தோம்

மணலில் வீடு கட்டி
மகிழ்ந்து நின்ற போது
சினந்து வந்த அலைகள்
சிதைக்கக் கவலை கொண்டோம்

கீரி மலைக்குச் சென்றோம்
கடலில் கப்பல் பார்த்தோம்
ஊரி சிப்பி சோகி
உள்ள தெல்லாம் சேர்த்தோம்

## President Abraham Lincoln



Abraham Lincoln, the 16th president of the United States of America (1861-1865) is one of the world's great statesmen for all time. His remarkable literary artistry. His profound sense of importance of the government by for and of the people and the manners of his life and death.

Have carved for him a niche in history here is a letter written by. Abaraham Lincoln to the head-Meater of a school in which his son was studying a letter sotypical of the man who bore malice towards none and had charity for all.

M.Thamilnila, Grade 7

## பழமொழிகள்

- ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் குரு, அகப்பட்டவனுக்கு அட்டமத்திலே சனி.
- கொண்டானும் கொடுத்தானும் ஒன்று,கலியாணத்தைக் கூட்டி வைத்தவன் வேறு.
- இராமனைப்போல் இராசா இருந்தால் அனுமானைப்போல் சேவகனும் இருப்பான்.
- அரைக்கிறவன் ஒன்று நினைத்து அரைக்கிறான், குடிகிறவன் ஒன்று நினைத்து குடிக்கிறான்.
- ஏறச் சொன்னால் எருது கோபம், இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம்.
- வில்வப்பழம் தின்பார் பித்தம் போக பனம் பழம் தின்பார் பசி போக.
- கைய பிடித்து கள்ளை வார்த்து, மயிரை பிடித்து பணம் வாங்குறதா?



யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதியுதவியுடனும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் மற்றும் யாழ். நண்பர்கள் அமைப்பு மற்றும் வட்டுக்கோட்டை விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி சி.மோகனால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க யாழ். பாதுகாப்புப்படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவின் ஆலோசனைக்கு அமைவாக அராலி வடக்கு பிரதேசத்திலுள்ள பெரியகுளம் இராணுவத்தினரின் இயந்திர மற்றும் ஆளணி உதவிகளுடன் மீளப்புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு வழங்கும் நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் நடைபெற்றது. இக்குளத்தின் மூலமாக 800 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை செய்யப்படுகிறது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி, படைப்பிரிவுகளின் கட்டளைத் தளபதிகள், அரச அதிகாரிகள், இராணுவத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வடக்கு-கிழக்கு மக்கள் போலி வாக்குறுதிகளால் ஏமாற்றப்படுகின்றனர்

## சுசில் சுட்டிக்காட்டு



(இராஜகிரிய)

போலி வாக்குறுதிகளை வழங்கி வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தமிழ் மக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த, சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் தமிழ் , ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் முரண்பாடுகள் காணப்படுவதாக முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருப்பதன் மூலம் இது தெளிவாகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

இராஜகிரியவிலுள்ள சுதந்திரக் கட்சி - பொதுஜன பெரமுன இணைந்த ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரச ஊழியர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு ஆரம்பமான பின்னரே புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது.

எனவே அவர்களுக்கு விஞ்ஞாபனத்தை பார்த்து அதற்கேற்ப வாக்களிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. அதற்கான தேவையும் அரச ஊழியர்களுக்கு இல்லை.

சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் சிங்கள மொழி பிரதிக்கும் ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழி மூல பிரதிகளுக்கும் முரண்பாடுகள் காணப்படுவதாக வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கிறார். அத்தோடு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் சஜித்துக்கான ஆதரவை தெரிவிக்கவில்லை.

மேலும் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய அரசியலமைப்பு பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனினும் அதில் ஒற்றையாட்சி என்ற சொல் எந்தச் சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தப்படவில்லை.

இதிலிருந்து சஜித் பிரேமதாஸ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக போலியான பிரசாரங்களை முன்னெடுக்கின்றார் என்பது தெளிவாகிறது.

புதிய அரசியலமைப்பு பற்றி பாராளுமன்றத்தில் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அதுபற்றி ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அன்று வெளிப்படுத்தப்படாத புதிய அரசியலமைப்பு பற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடே இன்று சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

எவ்வாறிருப்பினும் தொடர்ச்சியாக பொய் வாக்குறுதிகளை வழங்கி வடக்கு-கிழக்கிலுள்ள தமிழ் மக்களை ஏமாற்றும் உரிமை கூட்டமைப்புக்கு இல்லை. அவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றவும் முடியாது.

சஜித்தின் விஞ்ஞாபன மொழி பெயர்ப்புக்களில் சிக்கல் இருப்பதாக விக்னேஸ்வரன் தெரிவித்திருப்பதிலிருந்தே தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்பது தெளிவாகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சாந்த அபேசேகரவின் விளக்கமறியல் நீடிப்பு

(சிலாபம்)

பிணை நிபந்தனையை மீறிய குற்றச்சாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகரவை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது.

கடந்த 2004 ஆம் ஆண்டு அவரது இல்லத்தில் சட்டவிரோதமான முறையில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ஒன்றை பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

இதனையடுத்து அவருக்கு எதிராக சிலாபம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் ஆ.பாலச்சந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலை பழைய மாணவரும், யாழ்.மாநகரசபை ஆணையாளருமான இ.த.ஜெயசீலன்,சிறப்பு விருந்தினராக பாடசாலையின் முன்னை நாள் அதிபர் ம. கஜேந்திரன், கௌரவ விருந்தினராக பழைய மாணவரும் நாதஸ்வர வேணுகான விநோதனுமாகிய பி.எஸ். பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசியுரையுடன் நடைபெற்ற இவ்விழாவில் மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி.இலங்கினி ஜெயசீலன் வழங்கினார்.



மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தில் 2019 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை அதிபர் கா.கந்தசாமி தலைமையில் மீசாலையில் அமைந்துள்ள பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராசா, ரி.பி.ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக்கூடப் பணிப்பாளர் திருமதி இவாஞ்ஜெலின் யோகமணி அழகரட்ணம், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களான ந.திருவாசகன், எஸ்.சிவதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். வெட்டுப்புள்ளிக்கு மேல் 36 மாணவர்களும் 70 புள்ளிக்கும் 152 புள்ளிக்கும் இடையில் 56 மாணவர்களும் மொத்தம் 92 மாணவர்கள் பதக்கம் அணிவித்து சான்றிதழ் நிழல் படம் பொறித்த நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (படங்கள்: கொடிகாமம் செய்தியாளர்)

வீரம் நம் உடம்பின் ஆற்றல் அல்ல. அது, நம் உள்ளத்தின் பண்பு. – மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# சந்திரிகாவின் ஆளுமை கற்றறிய வேண்டிய பாடம்

இந்த நாட்டின் ஜனாதிபதியாக இரண்டு தடவைகள் இருந்தவர் திருமதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் மிகவும் விசுவாசமாகச் செயற்பட்ட சிங்களத் தலைவர்களில் சந்திரிகா குமாரதுங்கவைத் தவிர வேறு ஒருவரைச் சுட்டிக்காட்ட முடியாது.

அவர் தயாரித்த தீர்வுத் திட்டம் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்பனவற்றைத் தருவதாக இருந்தது.

அன்று சந்திரிகா அம்மையார் முன்வைத்த தீர்வுத்திட்டத்தைப் பாராளுமன்றத்தில் வைத்து தீயிட்டுக் கொளுத்தியவர் ரணில் விக்கிரமசிங்க என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

எதுவாயினும் சந்திரிகா குமாரதுங்க அவர்கள் கொண்டு வந்த தீர்வுத்திட்டத்தை ஏற்றுக் கொள்கின்ற சூழமைவு அன்று இல்லாமல் போனமைக்காக இன்று தமிழர்களே கவலைப்பட வேண்டியதாயிற்று.

ஆக, இலங்கையின் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வைக் கொடுத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் மூலம் யுத்தத்தை நிறுத்த வேண்டுமென நினைத்தவர் சந்திரிகா குமாரதுங்க என்பதும் அவரின் முயற்சி சறுகிப் போனபின்பு வடக்கில் யுத்தத்தை மேற்கொண்டதும் பின்னர் நடந்ததும் யாவரும் அறிந்ததே.

இவை ஒருபுறமாக இருக்க, இப்போது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருக்கின்ற சூழ்நிலையில், அவரின் அரசியல் ஆளுமை வியக்க வைக்கிறது.

இங்கு சஜித் பிரேமதாஸவுடன் அவர் ஒப்பந்தம் செய்த விடயத்தை நாம் பிரஸ்தாபிக்கவில்லை.

மாறாக மகிந்த ராஜபக்ஷ தரப்பை எதிர்ப்பதிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இருக்கக் கூடிய கட்சி அதிகாரங்களையும் கடந்து தனது தனிப்பட்ட ஆளுமையை மட்டும் பலமாகக் கொண்டு அவர் முன்னெடுக்கின்ற நகர்வுகளைப் பார்க்கும்போது,

சரி பிழைகளுக்கு அப்பால், இலங்கைத் தீவின் அரசியலில் இப்படியொரு பெண் ஆளுமை இருக்கிறது என வியக்கத் தோன்றும்.

அந்தளவுக்கு அவர் துணிச்சலோடும் இந்த நாட்டின் அதிபராக இருந்த ஆளுமையோடும் செயற்படுவதைக் காண முடிகிறது.

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யாரை ஆதரிக்கிறார். யாரை எதிர்க்கிறார் என்பதை ஒருபுறமாக வைத்துவிட்டு,

சமகாலத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தடுத்து அந்தக் கட்சியைக் காப்பாற்ற தனியொருவராக நின்று அவர் முன்னெடுக்கும் வியூகம் சாதாரணமானதன்று.

கட்சி காப்பாற்றப்படுவது என்பதற்கு அப்பால், கட்சியைக் காப்பாற்றுவதற்கு அவர் எடுத்த முயற்சி பற்றி நாம் ஆராய்வோமாக இருந்தால்,

சந்திரிகா குமாரதுங்கவின் ஆளுமை; தமிழ் மக்கள் சார்ந்து தமிழ் அரசியல் தலைவர்கள் கற்றறிய வேண்டிய பாடம் என்பதை மட்டும் நாம் இங்கு கூற முடியும்.

## முல்லை முத்தையன்கட்டுப்பகுதியில் சட்டவிரோத வலைகளுடன்

### ஐவர் கைதாகி நால்வர் பிணையில் விடுதலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து நேற்று மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீர் உயிரின செய்கை விரிவாக்கல் அதிகாரி குமார குலசிங்கம் சங்கீதன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் மற்றும் மாங்குளம் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து முல்லைத்தீவு முத்தையன் கட்டு குளம் பகுதியில் மேற்கொண்ட இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சட்ட விரோதமான முறையில் மீன்பிடிக்காக பயன்படுத்தப்பட்ட தடை செய்யப்பட்ட முக்கூட்டு வலைகளை உபயோகித்து மீன்பிடியில் ஈடுபட்ட ஐந்து பேர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

அவர்களிடமிருந்து ரூபா மூன்று இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான தடை செய்யப்பட்ட முக்கூட்டு வலைகளும், ஈயக்குண்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யபட்ட நபர்கள் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், நான்கு பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ம-3,299)

## யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் கொள்ளையுடன் தொடர்புடைய நால்வர்

### கோப்பாய் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

யாழில் பல இடங்களிலும் கொள்ளையில் ஈடுபட்டு வந்த நால்வர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை அதிகாலை கோப்பாய் பொலிஸார் ரோந்து சென்று கொண்டிருந்தபோது அப்பகுதியில் மோட்டார் சைக்கிளை திருடி எடுத்துச் சென்ற சமயம் நால்வர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் மானிப்பாய் மற்றும் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்தவர்களும் அடங்கியுள்ளதாக தெரிவித்த பொலிஸார் இவர்களில் ஒருவருக்கு ஐந்திற்கும்மேற்பட்ட வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் இதில் கைது செய்யப்பட்ட பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்தவர்புலோலி பகுதியில் தொடர்ச்சியாக இடம் பெற்ற கொள்ளைச் சம்பவங்களில் தொடர்புபட்டவரே கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவராவார்.

அவரை பருத்தித்துறை பொலிஸார் கோப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இவர் மூலம் வடமராட்சிப் பகுதியில் இடம் பெற்ற பல கொள்ளை, திருட்டுச் சம்பவங்கள் பிடிபடக் கூடும் என பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,60)

## மின்சாரசபை ஊழியர்களை தாக்கியமை தொடர்பில்

### வவுனியாவில் 10 பேர் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் மின்சார சபை ஊழியர்களை தாக்கியமை தொடர்பில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஆச்சிபுரம், 10 ஆம் ஒழுங்கைப் பகுதிக்கு மின் துண்டிப்புக்குச் சென்ற மின்சார சபை ஊழியர்கள் மீது கடந்த திங்கட்கிழமை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதில் 5 பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், மின்சார சபை வாகனம் ஒன்றும் சேதமாக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி என்.பி.வெலிகல அவர்களின் வழிகாட்டலில் பதில் பொறுப்பதிகாரி சம்பத் ரெரோ தலைமையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இதுவரை சந்தேகத்தின் பேரில் 10 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூன்று பெண்கள் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் நேற்று 7 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அடையாள அணிவகுப்புக்காக நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மின்சார சபை ஊழியர்கள் தாக்கப்பட்டமையால் மின்சார சபை ஊழியர்கள் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்ததும், மின்சாரத்தை வழங்கக் கோரி வவுனியாவில் இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3,250)

## நாடு முன்னேற வேண்டுமாயின் ஊழலை ஒழிக்க வேண்டும்

### ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸா நாயக்க

(கொழும்பு)

நாட்டை முன்னேற்ற வேண்டுமெனில் இலஞ்ச ஊழலைத்தான் முதலில் அழித்தொழிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'இந்த நாட்டை 71 வருடங்களாக அரசியல்வாதிகள் ஆட்சி செய்தார்கள். ஆனால், நாட்டை முன்னேற்ற வேண்டுமெனில் இலஞ்ச ஊழலைத் தான் முதலில் அழித்தொழிக்க வேண்டும்.

ஒரு வீட்டில் திருட்டுச் சம்பவம் ஒன்று நடந்து விட்டால், அது அந்த வீட்டுக்கே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி விடும்.

அதேபோலத்தான் நாட்டிலும். திருடர்கள் அதிகமாக உள்ள ஒரு நாட்டால் என்றும் முன்னோக்கிப் பயணிக்க முடியாது.

எந்த நாட்டுடன் ஒப்பிட்டாலும் எமது நாடு வறுமையான நாடாகத்தான் காணப்படுகிறது.

ஆனால், இங்குள்ள அரசியல்வாதிகள் அனைவரும் செல்வந்த வாழ்க்கையைத்தான் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நடைமுறையை முதலில் இல்லாதொழிக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## சத்திய தரிசனம்

### கடவுள் நிச்சயம் வருவார்



❖ ஆணவத்தை அறவே விடுங்கள். நம்மிடம் இருப்பது அனைத்தும் கடவுளுக்குச் சொந்தமானது என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

❖ பணிகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளும் போது. மனம் வேறு சிந்தனையில் மூழ்குவதில்லை. அந்தப் பணியே கடவுளுக்குரியதாக இருந்து விட்டால் இன்னும் அதன் மதிப்பு கூடி விடும்.

❖ எண்ணம், வாக்கு, செயல் மூன்றாலும் ஒன்றுபட்டு நில்லுங்கள். வாழ்வில் அமைதியைப் பெறுவதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை.

❖ சுகம் வந்தால் கடவுளை மறந்து விடுகிறோம். துக்கம் வந்தால் தேடி ஓடுகிறோம். இன்பம் துன்பம் எது வந்தாலும் அவரிடம் ஒப்படைத்து விடுங்கள்.

❖ துன்பம் வந்த சமயத்தில் கடவுள் உதவிக்கு வரவில்லையே என்ற கவலை தேவையில்லை. சரியான நேரத்தில் நிச்சயம் வந்து விடுவார்.

❖ வறுமையுற்ற காலத்தில் சேமித்த பணம் உதவுவது போல, துன்பமடைந்த காலத்தில் நற்செயல் களால் சேமித்த புண்ணியம் நம்மைக் காக்கும்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை யாழ். பிரதேசத்தில் மண்கும்பான், அல்லைப்பிட்டி, வெண்புரவிநகர், மண்கும்பான் நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஈரப்பெரிய குளம், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், உளுக்குளம், மூன்று முறிப்பு இராணுவ முகாம், வவுனியா இராணுவ முகாம், வவுனியா விமானப்படை இணைந்த பராமரிப்பு நிலையம், வவுனியா விமானப் படை ரேடர் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்


தக்க சமயத்தில் செய்த உதவி இந்த உலகத்தை விட உயர்ந்தது. -திருவள்ளுவர்

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்"

– கரலோஸ் இலினேயஸ் (தாவர வகைப் பாட்டியலாளர்)

# இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி




பருத்தித்துறை லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை, வடமராட்சி லீக்கின் அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் கரணவாய் கொலின்ஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பதிவு செய்யாததால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக டினோஜன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# அரையிறுதிக்குள் நுழைந்தது மயிலங்காடு ஞானமுருகன் அணி



கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக்கழகம் மாகாண ரீதியில் நடத்தும் கற்பக சமர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் தேவரையாளி யங்லயன்ஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 03:00 என்ற கோல்கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

ஞானமுருகன் அணி சார்பாக வாகின்சன் 02 , தீபன் ஒரு கோல்களை பெற்றுக் கொடுத்தனர். (க)

# அரையிறுதி ஆட்டங்கள்

வல்வை சனசமூக சேவா நிலையத்தின் மாவட்ட ரீதியிலான பவளவிழாக் கரப்பந்தாட்ட அரையிறுதிப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை வல்வை உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

முதலாவது அரையிறுதியாட்டம் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகமும் இரண்டாவது அரையிறுதியாட்டம் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

போட்டியில் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும் இறுதியாட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (க)

# அடுத்த சுற்றில் நாவாந்துறை சென்மேரீஸ்



வலிகாமம் லீக்கின் அனுசரணையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள லீக்குகளில் பதிவு செய்த கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் என்.நவரட்ணராஜா ஞாபகார்த்த "தலைவர் கிண்ண" உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் தெல்லிப்பழை நாமகள் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்மேரீஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் சென்மேரீஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

சென்மேரீஸ் அணி சார்பாக மதி, யுனிற்றன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர். (க)

# அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது சென்.நியூஸ்ரார் அணி



வலிகாமம் லீக்கின் அனுசரணையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள லீக்குகளில் பதிவு செய்த கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் என்.நவரட்ணராஜா ஞாபகார்த்த "தலைவர் கிண்ண" உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் சென்.நியூஸ்ரார் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் நியூஸ்ரார் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. (க)

# காலிறுதிக்கு தகுதி பெற்றது பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணி



கிரா்ஞ்சி செல்சிற்றி விளையாட்டுக்கழகம் மாகாண ரீதியில் நடத்தும் கற்பக சமர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணியை எதிர்த்து இரணைப்பாலை சென்.அன்ரனீஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் பாஷையூர் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. அன்ரனீஸ் அணி சார்பாக டிலுக்சன் பெற்றுக் கொடுத்தார். (க)

## சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனம்...

வித்துள்ளார்.

அத்துடன், ஒற்றையாட்சியை பாதுகாத்து சமஷ்டிக்கு எதிராக செயற்படுவதற்கான எழுத்து மூல உறுதிப்பாட்டை மகாநாயக்க தேரர்கள் முன்னிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரிடம் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து நேற்று புதன் கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், நாட்டில் பிரதான கட்சியொன்று ஒற்றையாட்சியை நீக்கிவிட்டு சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்துவதற்கான தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டமை இதுவே முதல் தடவையாகும் என்றும் அவர் மேலும் கூறினார். (ம-3)

## காற்று மாசால்...

காற்று மாசு வழமையை விட 2 மடங்காக இருப்பதாக தெரிவித்தார்.

கியுபிக் மீற்றருக்கு 50 மைக்றோ கிராம் ஆக இருக்கும் காற்றில் உள்ள சிறிய அளவிலான துகள்கள் நேற்று பிற்பகல் அளவில் 70 மைக்றோ கிராம் ஆக அதிகரித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

காற்று வீசும் திசை மாற்றமடைவதனால் இந்தியாவில் இருந்து இந்த தூசியுடனான மேகம் இலங்கை திசைக்கு வந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நிலவும் காற்று மாசு சூழலினால், சுவாச நோயுடன் கூடிய நபர்கள், சிறுவர்கள் மற்றும் வயதானோர் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் என்று சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார். (ம-3)

## தபால் மூலமாக...

கடந்த நான்கு தினங்களில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இதில் வாக்களிக்கத் தவறிய சகலருக்கும் இன்று காலை 7.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையில் தபால் மூலம் வாக்களிக்க அவகாசம் வழங்கியுள்ளதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

## வடக்கு மக்களின் நிலங்களை இராணு...

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு குறித்து ராஜபக்ஷ தரப்பினரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், வடக்கு, கிழக்கு மக்களின் பிரதான கோரிக்கை அவர்களின் நிலங்களை பெற்றுக் கொடுப்பதாகும். அதற்கான நடவடிக்கைகளை நாம் எமது ஆட்சியில் முன்னெடுத்துள்ளோம்.

முக்கால்வாசி நிலங்களை நாம் மக்களிடம் ஒப்படைத்துவிட்டோம். எஞ்சியுள்ள மக்களின் காணிகள் பாதுகாப்பு வலயங்களில் இருப்பதாலேயே அதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அதற்காக மக்களின் நிலங்களை இராணுவத்திடம் கொடுக்க நாம் தயாரில்லை.

இராணுவ முகாம்களுக்கு உரிய நிலங்களை தவிர ஏனைய நிலங்களை நாம் கண்டிப்பாக விரைவில் விடுவிப்போம். இது எமது நீண்ட கால தீர்மானம் என்பதே உண்மையாகும்.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் விசேட கவனம் செலுத்த வேண்டிய மக்களாக மாற கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற தவறுகளே காரணமாகும்.

எமது ஆட்சியில் அதே தவறை நாம் செய்ய தயாராக இல்லை. கடந்த நான்கரை ஆண்டுகளில் நாம் தமிழ் மக்களுக்கு நன்மைகளையே செய்துள்ளோம்.

அதேபோல் அரசியல் அமைப்பு தேவை ஒன்று ஏற்பட்டுள்ளது. இது தமிழ் மக்களுக்காக மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டுக்கும் புதிய அரசியல் அமைப்பு தேவையுள்ளது.

அதனையே தமிழ் மக்களும் கேட்கின்றனர். ஆகவே புதிய அரசியல் அமைப்பில் அதியுச்ச அதிகாரங்களை பகிர்ந்து தமிழர் நிலங்களில் அவர்களின் நிருவாக அலகுகளின் கீழ் செயற்பட இடமளிக்க வேண்டும்.

இது நாட்டினை துண்டாடும் செயற்பாடு அல்ல. அதேபோல்வேலை வாய்ப்புக்கள், அபிவிருத்திகள், தரமான கல்வி சுகாதாரம் என பனவற்றை தமிழ் மக்கள் கேட்பது ஜனநாயக விரோதமாக கருதும் நபர்களே இன்று இனவாத கருத்துக்களையும் பிரிவினைவாத கருத்துக்களையும் முன்வைத்து வருகின்றனர்.

ஐக்கியம் என்ற வார்த்தையைக் கூட விரும்பாத ராஜபக்ஷவினர் தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பையும் தமிழ் மக்களையும் அவமதிக்கும் வகையில் செயற்பட்டுவருகின்றனர் என அவர் தெரிவித்தார். (ம-3)

## ரெலோவும்...

களின் பின்னர் ஜனாதிபதிவேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென்ற முடிவை ரெலோ எடுத்துள்ளது.

பிரத்தியேக இடமொன்றில் ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினர்கள் 15 பேர் நேற்று நீண்ட நேர விவாதத்தை நடத்தினார்கள். இதில் பெரும்பாலானவர்கள் சஜித் ஆதரவு நிலைப்பாட்டை வலியுறுத்தினர்.

பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட நிலையில், பெரும்பான்மை உறுப்பினர்களின் அபிப்பிராயப்படி, புதிய ஜனநாயக கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தை ஆதரிப்பதென ரெலோவின் தலைமைக்குழு முடிவு செய்தது. (ம-3.250,299)

## 2, 983 முறைப்...

வாக்கிழமை மாலை வரை குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 116 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி மொத்தமாக தேர்தல் விதி மீறல்கள் தொடர்பாக 2861 முறைப்பாடுகளும், வன்முறை சம்பவங்கள் தொடர்பாக 25 முறைப்பாடுகளும் மற்றும் 97 வேறு முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ம-3)

## திசாநாயக்கவின் பாதுகாவலர்...

இதன்போது அவரின் பாதுகாவலர்கள் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் 2 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இரு தரப்பினருக்கும் இடையிலான மோதல் தீவிரம் அடைந்த நிலையில் பாதுகாவலர்கள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் மாற்று கட்சியின் ஆதரவாளர்கள் 2 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## ஜனாதிபதி இன்று...

நிகழ்த்தவுள்ளதாக தெரியவருகின்றது.

அத்துடன் புத்தாக்கம் தொடர்பிலான தேசியக் கொள்கைகளை அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்வதற்காக புத்தாக்க முகவராண்மையை ஸ்தாபித்தல் தொடர்பான சட்டமூலமும் இன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. (ம-3)

## அச்சம் என்பது எனக்கு துளியள...

அசலக பகுதியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தனது பயணத்திற்காக தான், தனிப்பட்ட வாகனத்தையே பயன்படுத்தியதாகவும், தனது சொந்த நிதியில் எரிபொருட்களை கொள்வனவு செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவாகும்போது தான் அந்த முன்னுதாரணத்தை பின்பற்றுவேன். தான் மாளிகையில் வசிக்கப் போவதில்லை. ஏனையவர்கள் அச்சமடைந்தாலும் நான் ஒரு போதும் அச்சமடைவதில்லை.

அச்சம் என்பது தனது உடலில் துளியளவேனும் இல்லை என்றும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வவுனியாவில்...

பிரியங்கா என்ற சிறுமி சம்பவ இடத்திலேயே தலை சிதறுண்டு பலியாகியுள்ளார்.

தாயார் சிறுகாயங்களுக்குள்ளாகி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் டிப்பர் சாரதி தப்பியோட முற்பட்டபோது பொலிஸார் மற்றும் அப் பகுதியில் இருந்த இளைஞர்கள் துரத்திப் பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இந்நிலையில் அவ்விடத்தில் கூடிய இளைஞர்கள் டிப்பரினை சேதப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை சாரதி மதுபோதையில் இருந்ததாக அங்கிருந்தவர்களால் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3.250.299)

## இனவாதம் மட்டுமே அவர்களிடம்...

வாதத்தைக் கொண்டு மீண்டும் நாட்டைச் சீரழிக்க முயற்சிக்கின்றார்கள்.

ஒவ்வொரு விதமாக பல மட்டங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அவர்கள் முன்னெடுத்து வருகின்றார்கள். அதே போன்று தமிழ் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றார்கள்.

இவர்கள்தான் தலதாமாளிகையைச் சுற்றி இரவு ரேஸ் ஓடியவர்கள்.

தலதாமாளிகைக்கு குண்டு வீசம் செய்தியைச் சொன்னவர்களும் இவர்கள்தான். அவர்களிடம் கையிருப்பில் இருப்பது இனவாதம் மட்டுமே.

கோத்தாவின் அறிக்கையை முழு நாடும் அறிந்திருக்கின்றது. எமது தேவைப்பாடு இனவாதமல்ல. அமைதியோடும் அபிவிருத்தியோடும் இலங்கையர் என்ற அடையாளத்தோடும் முன்னோக்கிச் செல்லுதல் என்பது மாத்திரமே நமக்கு உள்ளது.

அந்தத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யக் கூடிய ஆற்றல் சஜித் பிரேமதாசவுக்கு மட்டுமே உள்ளது. எனவே, சஜித்திற்கு வழங்குகின்ற வாக்கு ஒற்றுமைக்காகவும் இலங்கையர் என்ற அடையாளத்துக்காகவும் வழங்கப்படுகின்ற வாக்காகும்.

அதனால் நவம்பர் 16ஆம் திகதி சஜித்துக்கு வாக்களித்து ஒற்றுமையான நாட்டை கட்டியெழுப்புவோம் என்றார். (ம-3)

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 784
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.11.06
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 61,786,550/-
வெற்றி இலக்கங்கள் 11 29 36 61
ஆங்கில எழுத்து B

சனிக்கிழமை அதிர்ஷ்டம் ஶனித சுப்பிரி துஹஸ
சீட்டிழுப்பு இல.: 3258 திகதி: 2019.11.06
ஊதா புதன்கிழமை
விசேட இலக்கம் 4338
வெற்றி இலக்கங்கள் 37 50 52 73
ஆங்கில எழுத்து H
அடுத்த சனிக்கிழமை ஜக்பொட் 69,146,135/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 06/11/2019 வெற்றி வாரம் 2670 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 06 18 43 54
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,461,444
2019/11/07 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

සංවර්ධන වාසනාව அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 294
சீட்டிழுப்பு திகதி 06.11.2019 நீலம்
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 28 34 49
விதி எண் 2
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 46,506,924
2019.11.08 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 www.dlb.lk

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 06/11/2019
சீட்டிழுப்பு இலக்கம் 989
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 0 5 3 8 9 0

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 06-11-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2293
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 21 42 51 74

மெகா பவர்
திகதி 2019/11/06
சீட்டிழுப்பு இலக்கம் 455
Y 20 49 74 75 76

தன நிதானய
திகதி - 06/11/2019
சீட்டிழுப்பு இலக்கம் - 223
Z 11 24 49 82
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்


# நாட்டில் இனவாதத்தை தூண்டி ஆட்சியைக் கைப்பற்ற முடியாது

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(வாழைச்சேனை)

**இனவாதத்தை தூண்டும் எந்தவொரு கட்சியினாலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்ள முடியாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

**கிழக்கு மாகாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுதி செய்யும் மக்கள் பேரணியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**



இதேவேளை, ஐ.எஸ்.ஐ.எஸ்.கோட்பாடுகளை பின்பற்றுபவர்களினாலேயே ஏப்ரல் 21 தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாங்கள் அனைவரும்இந்த பயணத்தில் ஒன்றிணைந்து செல்ல வேண்டும்.

அந்த ஒற்றுமையை பாதுகாக்க வேண்டும். ஏப்ரல் 21 தாக்குதலை அடுத்து, முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரையும் குறை கூறினர்.

அந்தத் தாக்குதலை மேற்கொண்ட குழு ஐ.எஸ்.ஐ.எஸ்.கோட்பாடுகளை பின்பற்றுபவர்கள்.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பிற்கு எதிராக அரேபிய இராணுவமே பெரும்பாலான தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அல் பக்தாதியின் தலைமையத்தை சுற்றி வளைத்து தாக்குதல் மேற்கொண்டதில் அவர் பலியானார்.

இது தொடர்பில் உலக நாடுகளின் தலைவர்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

உலக நாயகனாக இல்லாவிட்டாலும், தானும் அது தொடர்பில் கருத்து வெளியிட்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-3)

# வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ

வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கான அடித்தளத்தை இடவுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கண்டி திகன நகரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய சஜித் பிரேமதாஸ, "ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் தனித்தனியான தொழிற் பேட்டைகளை உருவாக்க எதிர்பார்க்கின்றேன்.

இந்தியா, பங்களாதேஷ், வியட்நாம், நேபாளம், கம்போடியா ஆகிய நாடுகளுக்கு கிடைக்கும் வெளிநாட்டு முதலீடுகளை இலங்கைக்கு கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறான முதலீடுகளைக் கொண்டு வந்து எனது தந்தை போன்று ஒவ்வொரு பகுதியிலும் தொழிற் பேட்டைகள் உருவாக்கப்படும். அதனூடாக இளைஞர், யுவதிகளுக்கு மில்லியன் கணக்கான வேலைவாய்ப்புக்களை வழங்கத் தீர்மானித்துள்ளேன்.



அனைத்து பிரிவினரும் நன்மை அடையக்கூடிய வகையிலான கொள்கைப் பிரகடனம் ஒன்றை தயாரித்து முன்வைத்துள்ளேன். அதற்கமைய என்னால் முன்வைக்கப்பட்ட கொள்கைப் பிரகடனத்தை நன்றாக வாசியுங்கள். அதில் சொல்லப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் எந்தக் குறையும் இல்லாமல் நிறைவேற்றப்படும்.

கடந்த காலங்களில் திகன பகுதியில் இடம்பெற்ற சில சம்பவங்களால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சகோதரர்களைக் காண என்னால் வரமுடியாமல் போனது. அந்த வேளையில் நான் கடுமையாக சுகவீனம் அடைந்திருந்தேன்.

எனினும் அந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அனைவரதும் எதிர்காலத்தையும் நான் பொறுப்பேற்கின்றேன்" என்று தெரிவித்தார். (ம-3)


### தவறவிடப்பட்டுள்ளது

புளுட்டையன் பிள்ளையார் வீதி, கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த பிரபூர்ணா சிவசுதன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, விவசாய போதனாசிரியர் Job IC, வங்கி அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், முக்கிய ஆவணங்கள் அடங்கிய Hand Bag ஹம்சியா Hospital - US Hotel இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 0773248817 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-8149)


# புலம்பெயர் தமிழர்கள் ஈழக் கனவை கைவிட்டுள்ளனர்

## வடக்கு ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர் தமிழர்கள் ஈழம் கனவை கைவிட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தற்போது வடக்கு அபிவிருத்திக்கு ஒத்துழைக்க தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார். (ம-3)

# நூல் வெளியீடும் அன்பளிப்பும்

(யாழ்ப்பாணம்)

கணித பாட ஆசிரியர்களான வி.குக நாதன் மற்றும் எஸ்.வி.பாலமுரளி ஆகியோரின் வெளியீடுகளில் ஒன்றான தரம் 7 புதிய பாடத்துக்கான **கணிதம்** நூல் வெளியீடும் அன்பளிப்பும் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிசனில் சின்மயா மிசன் சுவாமி சிதாகாசானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலையின் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் ம.ஞானசம்பந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்நூலின் முதற்பிரதியை கிருபா லேணர்ஸின் உரிமையாளர் அ.கிருபாகரன் பெற்றுக் கொள்ளவுள்ளார். (ஞா)


### காணித் துண்டுகள் விற்பனைக்கு

சாவகச்சேரி நுணாவில் IOC பெற்றோல் செற் அண்மையில் A9 வீதியிலிருந்து 100M தூரத்தில் 2 பரப்பு, 3 பரப்பு காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு. பரப்பு 3,85000/

தொடர்பு:- 077 416 3146 (890)

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org



021 222 8093 புதிய விலாசம் No.17, Kandy Road, Jaffna. (857)

### சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

| | |
|---|---|
| லண்டன் - 540/= | கனடா - 950/= |
| ஜேர்மனி - 640/= | நெதர்லாந்து - 690/= |
| இத்தாலி - 690/= | |

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576



அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8109)

### ராஜ் நகை மாடம்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (887)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg (நிபந்தனைக்குட்பட்டது)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெல்லியடி, கொடிகாமம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மானிப்பாய், திருகோணமலை, சாவகச்சேரி, சுன்னாகம், மருதங்கேணி

0768226240 V2 TRAVELS (C-8115)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.